# எதிரொலி

ஆஸ்திரேலியா

ETHIROLI

குரல் 04 அதிர்வு 39 செப்ரெம்பர் 2020 ethirolimelbourne@gmail.com தொ.பே:1800 960 162


















ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்


24 வருட கால
நகை
அடகுச்சேவை
Maximum Value | Quick Service | Lowest Rate
• குறைந்த வட்டி வீதம்
• கடன் தொகை படிப்படியாக மீள் செலுத்தும் வசதி
• ஏழு நாட்களும் சேவையில்
EZY CASH PAWN SHOP
அடகுகடை
EZY CASH
Bala 0420 877 303
#Shop L01 102c, Dandenong Plaza Shopping Centre, 49-55 McCrae Street, Dandenong VIC 3175


நம்பிக்கை, தரம், நிரந்தரம்
உங்கள்
SRI MURUGAN
SINCE 1969
ஸ்ரீ முருகன் டிரேடிங்
SRI MURUGAN TRADING
(Largest Indian Grocer Chain)
PERFECT STOP FOR ALL
INDIAN
GROCERY NEEDS
03 7379 7777
www.srimurugantrading.com.au
@SriMuruganAustralia
POINT COOK | CARRUM DOWNS | NARRE WARREN
INDIA | SINGAPORE | MALAYSIA | INDONESIA | AUSTRALIA | DUBAI | FRANCE




கண்காணிப்பு - அவதானிப்பு - அனுப்பிவைப்பு

# சிறிலங்கா போறவர்களுக்கு என்ன நடக்கிறது?

● எஸ்.பிரதா

கொரோனா வைரஸின் கோரத் தாண்டவம் இலங்கையில் கட்டுக்குள் வந்திருந்தாலும் 'அபாயம் இன்னும் முழுமையாக நீங்கவில்லை' என்ற சிவப்பு எச்சரிக்கையால் கிருமி அரக்கனின் பிடிக்குள் இருந்து நாடு 'சுகாதார சுதந்திரம்' பெற்றுவிட்டது என்ற அறிவிப்பை இலங்கையால் விடுக்கமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

உலகளவில்ஒட்டுமொத்தகட்டமைப்புகளையும் கதிகலங்க வைத்துள்ள கொரோனா, இலங்கையின் பொருளாதாரத்தையும் துவம்சம் செய்துள்ளது என்றே கூறவேண்டும். சுற்றுலாத்துறை முற்றாக முடங்கியுள்ளதால், அத்துறையை நம்பியிருந்த பல தரப்பினரும் எப்படி மீண்டெழுவது என தெரியாமல்விழிபிதுங்கிநிற்கின்றனர். வேறுவழியின்றி ஐந்து நட்சத்திர விடுதிகள்கூட கொரோனா முகாம்களாக உருமாறி - வருமானம் பார்க்கின்றன.

சீனாவில்கடந்தடிசெம்பரில்பிறப்பெடுத்த கொரோனா, ஜனவரியிலிருந்து உலகெங்கிலும் தலைவிரித்தாட தொடங்கியது. இலங்கைக்குள்ளும் சுற்றுலாப்பயணிகள் ஊடாகவே ஊடுருவியது. இதனை கட்டுப்படுத்துவதற்கு மார்ச் மாதம்வரை காத்திருக்காது, இலங்கை அரசாங்கம் முன்கூட்டிய நடவடிக்கைகளை எடுத்திருந்தால், இன்னும் பாதுகாப்பாக இருந்திருக்கும் என்பதே வல்லுநர்களின் கருத்தாக உள்ளது. விமான நிலையத்தையும் துறைமுகங்களையும் மூடி, சுற்றுலாப்பயணிகளை தனிமைப்படுத்தியிருந்தால் கொத்தணிப்பரவலை ஆரம்பத்திலேயே தடுத்திருக்ககூடும் என்ற கருத்தும் நிலவுகின்றது.

### "கொவிட் 19" அச்சம் நீங்கியது பழக்கமும் மாறியது

மார்ச் முதல் மே மாதம் 23 ஆம் திகதி வரை இலங்கையில் ஊரடங்கு அமுலில் இருந்தது. அதன்பின்னர், சில கட்டுப்பாடுகள் தொடர்ந்தன. தற்போது ஊரடங்கு நடைமுறையில் இல்லாதபோதிலும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு அறிவுறுத்தல்கள்விடுக்கப்படுகின்றன. ஆனால், ஆரம்பத்தில் பின்பற்றப்பட்டதைபோல சுகாதார நடைமுறைகளை பெரும்பாலானவர்கள் கடைபிடிப்பதில்லை.

நகரங்களில் கடைகளுக்கு முன்னாலும், பொது இடங்களிலும் கைகளை கழுவுவதற்கான வசதிகள் செய்யப்பட்டிருந்தன. தற்போது அந்தக்கட்டமைப்பு இருக்கின்றது, ஆனால், தண்ணீர் மற்றும் சவக்காரம் இல்லை, உடல் வெப்பத்தை கணிப்பதற்கு கடைகளுக்கு முன்னால் பணிக்கு அமர்த்தப்பட்டிருந்த ஊழியர்களும் காணாமல் போயுள்ளனர். முகக்கவசம் அணிவதைக்கூட பலர் மறந்து விட்டனர். சமுக இடைவெளியையும் சமுகம் மறந்துவிட்டது.

கொரோனா வைரஸ் தாக்கம் சில வருடங்களுக்கு தொடரும் என்று "உலக சுகாதார நிறுவனம்" எச்சரிக்கை விடுத்திருப்பதுடன், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வாழ்வதை வழக்கமாக்கிகொள்ளுமாறும் ஆலோசனை வழங்கியுள்ளது.

அதேபோல், வெளிநாடுகளில் இருந்து தினமும் பலர் நாடு திரும்பிக்கொண்டிருக்கின்றனர். அவர்களில் சிலர் கொரோனாவுடனேயே நாட்டுக்கு வருகின்றனர். தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்படுவதால் ஆபத்து இல்லை என்ற போதிலும், ஏதேனும் ஒரு வழியில் சமுகத்தில் இருக்கும் ஒருவருக்கு தொற்றினால் நிலைமை என்னவாகும்? மீண்டும் கட்டுப்பாடு, ஊரடங்கு போன்ற கட்டங்களுக்கு செல்லவேண்டியேற்படும்.

எனவே, அனைவரும்பொறுப்புடனும், பொதுநலன் கருதியும் செயற்பட்டு கொரோனா ஒழிப்பு சமரில்இணையவேண்டும்,

நாட்டில் வர்த்தக நடவடிக்கைகள் வழமைக்கு திரும்ப ஆரம்பித்தாலும் சில நிறுவனங்கள் தொழிலாளர்களுக்கு இன்னும் பாதி சம்பளத்தையே வழங்கிவருகின்றன. வேலையிழந்தவர்களும் புதிய வாய்ப்புகளுக்காக வழிமீது விழிவைத்து காத்திருக்கின்றனர். மூன்று மாதங்கள் 5 ஆயிரம் ரூபா அரசாங்கத்தால் வழங்கப்பட்டிருந்தாலும் கூட தற்போது எந்தவொரு நிவாரணத்திட்டமும் இல்லை என பாதிக்கப்பட்டவர்கள் கூறுகிறார்கள்.

### இலங்கைக்கு விமானத்தில் வரும் வெளிநாட்டு 'குண்டு'

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக கடந்த மார்ச் முதல் விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. வெளிநாட்டு பயணிகள் எவரும் நாட்டுக்கு அனுமதிக்கப்படவில்லை. வெளிநாடுகளில் இருக்கும் இலங்கையரை அழைத்து வருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனினும், கொரோனா தடுப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு வெளிநாடுகளில் சிக்கி தவித்த இலங்கை மாணவர்கள் முதற்கட்டமாக அழைத்துவரப்பட்டனர். இதற்காக தியத்தலாவையில் தனிமைப்படுத்தல் நிலையங்கள் அமைக்கப்பட்டன.

வெலிசறை கடற்படை முகாம் மற்றும் கந்தக்காடு புனர்வாழ்வு நிலையம் ஆகியவற்றில் ஏற்பட்ட கொத்தணி பரவலையடுத்து, வெளிநாடுகளில் இருந்து இலங்கையர்களை அழைத்தவரும் பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து வருகைதந்த பலருக்கு கொரோனா தொற்று இருப்பது கண்டறியப்பட்டதையடுத்து, வெளிநாட்டில் இருந்து வருபவர்கள் 'கொரோனாகுண்டு' எனவிமர்சிக்கப்படும்நிலையும் நாட்டில் உருவானது.

உள்நாட்டில் வைரஸ் பரவாமல் இருப்பதை உறுதிப்படுத்திய பின்னர், வெளிநாடுகளில்உள்ளஇலங்கையர்களைநாட்டுக்குள் அழைத்துவரும் பணியை கட்டம், கட்டமாக அரசாங்கம் முன்னெடுத்தது. ஆரம்பத்தில் தியத்தலாவை, மட்டக்களப்பு, நீர்க்கொழும்பு, புத்தளம்உட்படசிலபகுதிகளில் தனிமைப்படுத்தல்நிலையங்கள் அமைக்கப்பட்டன.

### அந்த 14 நாட்கள்...

ஆரம்பத்தில் அழைத்துவரப்பட்டவர்கள் 14 நாட்கள் மருத்து கண்காணிப்பில் வைக்கப்பட்டனர், விமான நிலையத்தில் வந்திறங்கியதும் அவர்களின் பைகள் உரிய வகையில் தொற்றுநீக்கம் செய்யப்படும், அதன்பின்னர், ஆரம்பக்கட்ட மருத்துவ பரிசோதனைகள் முடிவடைந்தபின்னர், பிரத்தியேக பஸ்களில் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு - பாதுகாப்புக்கு மத்தியில் - அழைத்து செல்லப்படுவார்கள், இரண்டு பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும், வைரஸ் தொற்று உறுதியானால் கொரோனா சிகிச்சைக்காக அமைக்கப்பட்ட வைத்தியசாலைகளுக்கு அனுப்படுவர்.

ஏனையோர் 14 நாட்களுக்கு பிறகு, மருத்துவ கண்காணிப்பில் இருந்து விடுவிக்கப்படுவர், அதற்கான, சான்றிதழும் சுகாதார பரிசோதகர்களால் வழங்கப்படும்.

(05ஆம் பக்கம் பார்க்க)



### கண்காணிப்பு - அவதானிப்பு - அனுப்பிவைப்பு

# சிறிலங்கா போறவர்களுக்கு என்ன நடக்கிறது?

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரத்தியேக வாகனங்களிலேயே இருப்பிடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். அப்பகுதிகளுக்கு பொறுப்பான சுகாதார பரிசோதகர்களால் அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

14 நாட்களின் பின்னர், ஓரிருவருக்கு வைரஸ் தொற்று உறுதியானதால், 14 நாட்களுக்கு பின்னர் வீடுகளிலும் தங்களை தனிமைப்படுத்திக்கொள்ளவேண்டும் என்றநிபந்தனைஅடிப்படையிலேயேவெளிநாட்டவர்கள் கண்காணிப்பு முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்டனர். வீடுகளுக்கு சென்ற பிறகு பொதுசுகாதார பரிசோதகர்களால் அவர்கள் கண்காணிக்கப்பட்டனர்.

முப்படையினரின் கட்டுப்பாட்டுக்குள் கொரோனா தடுப்பு மையங்கள் இருப்பதால், 24 மணிநேரமும் உச்சகட்ட பாதுகாப்பு என்றே சொல்லவேண்டும், எவரும் தப்பிசெல்லமுடியாத விதத்திலும், உள்ளே எவரும் பாதுகாப்பின்றி நுழைய முடியாத வகையிலும் இறுக்கமான ஏற்பாடுகள் கடைப்பிடிக்கப்படுகின்றன.

தனிமைப்படுத்தல் நடவடிக்கை தொடர்பில் கட்டார் மற்றும் இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய இருவர் 'எதிரொலியிடம்' தமது அனுபவங்களை பகிர்ந்துகொண்டனர்.

“விமானம் ஏறுவது முதல் இறங்குவது வரை முழுமையாக சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றினோம். விமானத்தில் அருகில் இருந்தவரைக்கூட பார்க்க அச்சமாக இருந்தது. இலங்கைக்கு வந்த பின்னர், படையினர் பஸ்களில் ஏற்றிச்சென்றனர். ஆரம்பத்தில் ஒரு பிசிஆர் பரிசோதனையும் அதன்பின்னர்மற்றுமொன்றும்மேற்கொள்ளப்பட்டது.

“தனிமைப்படுத்தல் முகாமில் மூன்று வேளையும் பிரதான உணவுகள் வழங்கப்பட்டன, கொத்தமல்லி வழங்கப்பட்டது, இலவச 'வைபை' வசதிகூட இருந்தது, சமூக இடைவெளி உள்ளிட்ட நடைமுறைகளை பின்பற்றியே அறைகள் ஒதுக்கப்பட்டிருந்தன. விமானப்பயணத்துக்கான டிக்கெட் செலவை மட்டுமே நாம் பொறுப்பேற்றோம். பிசிஆர் பரிசோதனை முதல் ஏனையவை இங்கு இலவசமாகவே செய்யப்பட்டது.” - என்றனர்.

#### ஐந்து நட்சத்திர விடுதியும் கொரோனாவும்

இலங்கையில் சமூகத்தொற்று கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ள நிலையில், மத்திய கிழக்கு நாடுகள், ஆபிரிக்க நாடுகள் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இருந்து தாய் நாடு திரும்ப விரும்பியவர்களை அழைத்துவரும் செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுத்துவருகின்றது.

ஆரம்பத்தில் சில ஹோட்டல்கள் தனிமைப்படுத்தும் நிலையங்களாக செயற்பட்டாலும் தற்போது படையினரின் கண்காணிப்பின்கீழ் நிர்வாகத்தினரின் அனுமதியுடன் ஐந்து நட்சத்திர மற்றும் பிரதான ஹோட்டல்களும் தனிமைப்படுத்தல் நிலையங்களாக்கப்பட்டுள்ளன. முப்படையினரின்கிழ்தற்போது60தனிமைப்படுத்தல் நிலையங்கள் இயங்குகின்றன. ஹோட்டல்களுக்கும் இராணுவ மற்றும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

நுவரெலியா, பாசிக்குடா, நீர்க்கொழும்பு உட்பட சுற்றுலாப்பயணிகள்தங்கும்ஹோட்டல்களே தனிமைப்படுத்தல் நிலையங்களாக இயங்கிவருகின்றன. பணவசதி இருப்பவர்கள் - தாம் விரும்பினால் - இவ்வாறான நட்சத்திர விடுதிகளில் தம்மை தனிமைப்படுத்திக்கொள்ளலாம், அவ்வாறுஇல்லாவிட்டால் ஏனையவற்றுக்கு செல்லாம்.

ஆஸ்திரேலியாவில்இருந்துவந்தஒருவர் நட்சத்திர ஹோட்டல் நடைமுறை பற்றி தனது அனுபவங்களை எதிரொலியுடன் பகிர்ந்து கொண்டார்.

“இலங்கைக்கு செல்வதாக இருந்தால், முதலில் நாம் வசிக்கும் பகுதியிலுள்ள கவுன்ஸில் தலைமையகத்தில் பதிவுசெய்யவேண்டும், உதாரணமாக, மெல்போனாக இருந்தால் அங்குள்ள தலைமையகத்துக்கு தகவல் வழங்கவேண்டும், அதன்பின்னர் தூதரகத்துடன் இணைந்து கூட்டு நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

“பயணிப்பதற்கான விமான வாய்ப்பு இருக்கும்பட்சத்தில், அது தொடர்பில் நான்கு, ஐந்து நாட்களுக்கு முன்னர் எமக்கு அறிவிக்கப்படும், கட்டண விவரங்களும் கூறப்படும், அதற்கு நாம் உடன்படவேண்டும், ஹோட்டல்தேர்வும்இருக்காது, ஆனாலும் நட்சத்திர தரத்திலான ஹோட்டலுக்கே அழைத்துச்செல்லப்படுவோம்,

“ஆஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இருந்து செல்பவர்கள் பெரும்பாலும் ஹோட்டல்களிலேயே தனிமைப்படுத்தல் காலப்பகுதியை நிறைவுசெய்கின்றனர். இதற்கான சேவையை 44 ஹோட்டல்கள் வழங்குகின்றன.

“இலங்கையில்இறங்கியவுடன், முதலில் எமது பயணப்பைகள் இரசாயன ரீதியாக தொற்றுநீக்கம்செய்யப்படும். அதன்பின்னர், இராணுவத்தினரால் பிசிஆர் பரிசோதனைக்கான மாதிரி பெறப்படும், அந்நடவடிக்கைகள் முடிவடைந்ததும் உடல் உஷ்ணம் கணிக்கப்பட்டு, சொகுசு பஸ்களில் ஏற்றப்படுவோம். எம்மை சந்திப்பதற்கு உறவினர்கள், விமான நிலையம் வந்திருந்தால் கூட அவர்களை சந்திப்பதற்கு அனுமதி வழங்கப்படாது.

“உரிய அறிவுறுத்தல்கள், ஆலோசனைகள் வழங்கப்பட்ட பிறகே ஹோட்டல்களுக்குஅழைத்துசெல்லப்படுவோம், ஹோட்டல் அறைக்குள் சென்றதும் வெளியில் திரியமுடியாது, அறைக்குள்இருக்கும் 'பல்கனி' பகுதிக்கு செல்லலாம். ஹோட்டலுக்கு இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கும். 'உங்கள்நன்மைக்கேஇவ்வாறானநடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன, நடைமுறையை மீறினால் கந்தக்காடு முகாமுக்கு அனுப்பப்படுவீர்கள்' எனஇராணுவத்தினர் அறிவித்தனர்.

“நட்சத்திர தரத்திலான ஹோட்டல்என்பதால், மூன்று வேளையும் தரமான உணவுகள் வழங்கப்பட்டன, சிறு குழந்தைகளுக்கு தேவையான உணவுகளும் வழங்கப்படும், விசேட தேவையுடைய எவராவது இருந்தால், அவர்களுக்கான சிறப்பு ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும்.

“தனிநபர் அறை, இருவர் தங்கக்கூடிய அறை, மூவர் தங்கக்கூடிய அறை என வசதிகளுக்கு ஏற்றவாறு கட்டணத்தில் மாற்றமுண்டு. குறிப்பாக, ஒரு வழிபோக்குவரத்து பயணம், இரண்டு பிசிஆர் பரிசோதனைகள், 14 நாட்களுக்கான தங்குமிடவசதி மற்றும் உணவுகளுக்கு நான் மொத்தமாக 2500 ஆஸ்திரேலிய டொலர்களை செலுத்தினேன்.

“ஹோட்டலில் தங்கியிருக்கும் காலப்பகுதியில், அறைக்குள் இருந்து வேறு எங்கும் செல்லமுடியாது, ஏதேனும் பிரச்சினைகள்இருந்தால், எமக்கு உணவு வழங்கும் நேரத்தில், அது குறித்து முறையிடலாம், ஹோட்டல் ஊழியர்கள், அப்பகுதிக்கு வருபவர்களை இராணுவத்தினர் கண்காணிப்பார்கள், ஹோட்டலில்இருந்துசெல்வதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர், இரண்டாவது பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படும். தனிமைப்படுத்தலில் இருப்பவர்கள் இருக்கும்வரை, வேறு நபர்களுக்கு ஹோட்டல்களில் அறைகள் வழங்கப்படாது.

“நான் குறைகள் என பெரிதாக எதனையும் காணவில்லை, ஆனால், 14 நாட்கள் தங்கவேண்டும். எனவே, வருபவர்கள்புத்தகங்கள் உள்ளிட்டவற்றை எடுத்து வந்தால் பயனுடையதாக இருக்கும்” - என்றார்.

#### சுற்றுலாப்பயணிகளுக்கான திட்டம்

இலங்கையில் கடந்த 15 ஆம் திகதி வரை 2 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டபிசிஆர்பரிசோதனைகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன, அத்துடன், 43 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தனிமைப்படுத்தலை நிறைவுசெய்துகொண்டு வெளியேறியுள்ளனர்.

கொரோனாவை கட்டுப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தாலும் கொரோனா தாக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குஇன்னும்உருப்படியானவேலைகள் எதுவும் செய்யவில்லை என்பது வேதனைக்குரிய விடயமாகும்.

சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்து, நட்சத்திர தரத்திலான ஹோட்டல்கள் பெரும் நெருக்கடியை எதிர்கொண்ட நிலையில், அங்கு முன்னெடுக்கப்படும் தனிமைப்படுத்தல்செயற்பாடுகள்மூலம்வருமானம்கிடைக்கிறது. இதன்மூலம், சுற்றுலாத்துறைக்கு ஓரளவு தாக்குபிடிக்ககூடிய சக்தி கிடைக்கின்றது.

அதேவேளை, இலங்கைக்கு சுற்றுலா மேற்கொள்வதற்கு வெளிநாட்டு பயணிகள் ஆர்வமாக இருப்பதுடன் அதற்கான விண்ணப்பங்களையும் உரியதரப்புக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, விமானநிலையம் திறக்கப்பட்ட பின்னர் அவர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும் வெளிநாடுகளில் இருந்து சுற்றுலாப்பயணிகளாக வருபவர்கள் இங்கு வருவதற்கு முன்னர் அந்நாட்டில் பிசிஆர் பரிசோதனை மேற்கொண்டதற்கான மருத்துவசான்றைகொண்டுவரவேண்டும், இங்கு வந்த பிறகும் பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படும், 14 நாட்கள்தனிமைப்படுத்தப்பட்ட பின்னர், அவர்களை நாட்டுக்குள் அனுமதிப்பதற்கான ஏற்பாடுகளே தற்போது முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

இத்திட்டம் இன்னும் செயற்படுத்தப்படவில்லை. உலகில் பல நாடுகளில் கொரோனா தொற்று அதிகரித்துவருவதால் விமானநிலையம் எப்போது திறக்கப்படும் என்பதை உறுதியாககூறமுடியாத நிலையும் காணப்படுகின்றது.

இதேவேளை, சுற்றுலாபயணிகளுக்கும் வியாபார விவகாரங்களுக்கும் இலங்கை வருபவர்களுக்கும் விமானநிலையத்தினை திறக்கும் திகதியை சிறிலங்கா காலவரையறையின்றி ஒத்திவைத்திருப்பதாக அறிவித்துள்ளது. மேற்படி வருகையாளர்களுக்கு ஒகஸ்ட் மாத நடுப்பகுதியில் விமானநிலையத்தை திறக்கப்போவதாக முன்னர் அறிவிக்கப்பட்டு, பின்னர் அது செப்ரெம்பர் மாதத்திற்கு பிற்போடப்பட்டிருந்தது. ஆனால், தற்போது கொரோனா தொற்றுக்குள்ளாபவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதால், இந்த திகதியை மேலும் ஒத்திவைப்பதாக சிறிலங்காவின் சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கொரோனா தடுப்பு சிறப்பு செயலணி சிறிலங்காவின் அமைச்சரவைக்கு வழங்கும் ஆலோசனையின் பிரகாரம் இந்த முடிவு எடுக்கப்படும் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

சிறிலங்காவுக்கும் ஏனைய நாடுகளுக்கும் இடையில் அந்தந்த நாட்டவர்களை கொண்டுபோய் சேர்த்துவிடுகின்ற நடவடிக்கையில்விமானநிறுவனங்கள்தொடர்ந்தும் சேவையை வழங்கிவருகின்றன. Shanghai, Male, New Zealand, Milan, Sydney, Frankfurt, Tokyo, London ஆகிய இடங்களுக்கு சிறிலங்கன் எயார் லைன்ஸ் தனது சேவைகைள நடத்திவருகிறது.

அத்துடன், சிறிலங்காவின் ஏற்றுமதிப் பொருட்களை குறிப்பிட்ட இடங்களுக்கு கொண்டுசென்று சேர்ப்பதன் மூலம் நாட்டின் ஏற்றுமதி வர்த்தகத்தினை உயிர்ப்புடன் வைத்திருப்பதற்கு சிறிலங்கன் எயார் லைன்ஸ் சரக்கு விமான சேவையாகவும் பணியாற்றிவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதைவிட, National Carrier, Qatar Airways, Emirates, Etihad, Turkish Airlines ஆகிய வெளிநாட்டு விமானசேவைகள் வெளிநாட்டிலுள்ள சிறிலங்கர்களை கொண்டுபோய் சொந்தநாட்டுக்கு கொண்டுபோய் சேர்க்கின்ற சேவையை வழங்கிவருகிறது.

இந்த விமானசேவைக்கான நடவடிக்கைகள் கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் தொடர்ச்சியாக நடைபெற்றுவருகின்றன.

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:03 அதிர்வு: 39 செப்ரெம்பர் 2020 தொ.பே:1800960162

# பொறுப்பு வேண்டாமா? எதிரொலி மீது சீற்றம்!

*அன்புள்ள எதிரொலி ஆசிரியபீடத்தினருக்கு வணக்கம்.*

*உங்களது 2020 ஒகஸ்ட் மாத எதிரொலி பார்த்தேன். அதில் 04 - 12 - 13 ஆம் பக்கங்களில் வெளியாகியிருக்கும் செய்திக்கட்டுரைகளுக்கு நீங்கள் சூட்டியிருக்கும் தலைப்புகள் தமிழ் மக்கள் மத்தியில் விஷம் கக்கும் செயலுக்கு ஒப்பானது. ஊடக தர்மத்திற்கு விரோதமாக இவ்வாறு எழுதி வாசகரின் வெறுப்புக்கு ஆளாகவேண்டாம்.*

*பத்திரிகை என்பது உங்களது முகநூல் கணக்கு அல்ல..! உங்கள் முகநூலில் எதுவும் எழுதுங்கள். அதற்கான எதிர்வினைகள் உங்களைப் பொறுத்தது. வளர்ச்சியடைந்த ஊடகத்துறை இருக்கும் எங்கள் அவுஸ்திரேலியா போன்ற ஒரு பல்லின கலாசார நாட்டிலிருந்து கொண்டு உங்கள் இன ரீதியான - மத ரீதியான கேலித் தனங்களை தொடரவேண்டாம் என்று நானும் ஒரு ஊடக வியலாளன் என்ற ரீதியில் கேட்டுக்கொள்கின்றேன்.*

*அன்புடன்*

*முருகபூபதி*

என்ற கடிதம் எதிரொலியின் கடந்த இதழின் பிறகு




ஆசிரியர் பீடத்துக்கு கிடைக்கப்பெற்றது. இதனை வாசகர் கடிதமாக பெற்றுக்கொள்ளும்படி முருகபூபதி அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு அமைய, இது தொடர்பான விளக்கத்தை இங்கு தருவது முக்கியமாகிறது.

எதிரொலியின் கடந்த இதழில் நான்காம் ஐந்தாம் பக்கங்களில் "அரோஹரா நல்லூரில் இனி பெரஹரா?"- என்ற தலைப்பில் கவல்கனன் எழுதிய பத்தியும் 12 ஆம் மற்றும் 13 ஆம் பக்கங்களில் "சிறிலங்காவின் 225 சிங்கள கதிரைகளில் அமரப்போகும் 48 தமிழ் குரல்கள்" என்ற தலைப்பிலான கொழும்பிலிருந்து எதிரொலிக்காக எதிரொலி நிருபர் எழுதிய கட்டுரையும் வெளியாகியிருந்தது.

இந்த இரண்டு கட்டுரைகளினதும் தலைப்பு குறித்தே முருகபூபதி அவர்கள் தனது ஆதங்கத்தினை வெளிப்படுத்தியிருந்தார்.

ஒரு பத்திரிகையில் வெளிவந்த விடயம் குறித்த தனது ஆதங்கத்தினை அந்தப்பத்திரிகையின் ஆசிரியர் பீடத்துக்கே கடிதம் மூலம் தெரிவித்துக்கொண்ட முருகபூபதியின் வெளிப்பாட்டினை எதிரொலி ஆசிரியர் பீடம் மதிப்போடு ஏற்றுக்கொள்கிறது. ஊடகங்களில் வெளிவரும் விடயங்கள் குறித்து அந்த ஊடகங்களிடம் எந்த விளக்கமும் கேட்டறிந்துகொள்ளாமல் பொதுவெளிகளில் குஸ்தி போடுவதுதான் இப்போதெல்லாம் கலாச்சாரமாக பரவிவிட்ட நிலையில், மிகவும் கண்ணியமாக இதனைஅணுகியுள்ள முறை குறித்து எதிரொலி பெருமை கொள்கிறது.

இனி விடயத்துக்கு வருவோம்.

"அரோஹரா நல்லூரில் இனிபெரஹரா?" என்ற கவல்கணனுடைய கட்டுரையை முழுமையாக படித்தவர்களுக்கு இந்தக் கட்டுரையின் உள் அடர்த்தி குறித்து புரிந்திருக்கும். நல்லூர் கோவிலின் பின்னணியில் உள்ள வரலாறு பல அதிர்ச்சிகரமான சம்பவங்கள் நிறைந்தது.

நல்லூர் கோயில் பலகால கட்டங்களில் பல்வேறு வகையான வரலாறுகளை தன்னகத்தே கொண்டதாக ஒவ்வொரு வரலாற்று ஆய்வாளர்களின் வழியாகவும் பதிவுசெய்யப்படுகிறது. ஆனால், 14 ஆம் நூற்றாண்டில் நல்லூரை ராசதானியாகக்கொண்ட சிறிசங்கபோதி புவனேகபாகுதான் இந்தக்கோவிலை கட்டியிருக்கிறான் என்பது ஓரளவுக்கு எல்லா வரலாற்றுக் குறிப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இன்று, நல்லூர் கோவிலானது மாப்பாண முதலியார் வம்சத்தினால் நிர்வகிக்கப்பட்டு வந்தாலும், கோவில் திருவிழாவின்போது புவனேகபாகுவின் பெயரும்கூட கட்டியம் கூறப்படுகிறது. இவ்வளவுக்கு வரலாறு இந்துக்களின் தரப்பில் மிகவும் பலவீனமாக காணப்படுகின்றது என்பது யதார்த்தம்.

இந்நிலையில், அண்மையில் எல்லாவ மேதானந்த தேரர் நல்லூர் கோவில் பௌத்தர்களுடையதே என்றும் தங்களது"முப்பாட்டன்" புவனேகபாகுவினால் அது கட்டப்பட்டது என்றும் அறைகூவல் விடுத்திருக்கிறார். இதில் எவ்வளவு உண்மை உள்ளது என்பதை ஆராய வேண்டியுள்ள அதேவேளையில், எந்தப்பொய்யும் இல்லை என்பதுதான் தற்போதைய வரலாறு.

இந்தப் பின்னணியில், நல்லூரின் வரலாற்றை ஆய்வு செய்யும் கட்டுரைக்கு "அரோஹரா நல்லூரில் இனி பெரஹரா?" என்று எதிரொலியில் தலைப்பிடப்பட்டது.

இதில் எதிரொலி எங்கே நஞ்சுகக்கியது? இந்த தலைப்புக் கூட கட்டுரையின் உள்ளடக்கத்தினை அறுதியாக வலியுறுத்திக் கூறாமல், கேள்விக்குறியுடன்தான் வெளிவந்திருந்தது. அதாவது, இப்படி ஒருவரலாறு கோரப்பட்டிருக்கிறது என்றால், அதற்கு மாற்று வரலாறு ஒன்றினை இன்னொருதரப்பு முன்வைக்கலாம். விவாதத்துக்கு உட்படுத்தலாம்.

ஒரு தலைப்பில் அங்கதம் தொனிப்பதை செய்திகளும் பத்திரிகைகளும் உள்வாங்கி பல காலமாகிவிட்டது. அதுவும் வார - மாத பத்திரிகைகளின் தலைப்பு இவ்வகையானதே என்பது பாரம்பரியமானது.

சரி, இனி அடுத்த விடயத்துக்கு வருவோம்.

"சிறிலங்காவின் 225 சிங்கள கதிரைகளில் அமரப்போகும் 48 தமிழ் குரல்கள்"

"சிங்கள மக்களின் வாக்குகளில் மாத்திரம் ஆட்சிபீடம் ஏறுவதற்கு ஆணைவழங்குங்கள்" - என்று சிங்கள மக்களிடம் ஆதரவுகோரிய கோட்டபாய ராஜபக் ஷவின் கோரிக்கைக்கு இணங்க, இன்று முழுநாட்டின் ஆட்சியும் ஒற்றைத் தேசியசிந்தனைகொண்டஒரு இனத்திடம் தாரைவார்க்கப்பட்டிருக்கிறது.

பன்மைத்துவம் இல்லாத - சிறுபான்மை இனத்திற்கு எந்த உரிமையும் இல்லாத - கடந்தகாலயுத்தவாதத்திற்கு மேலும் சாம்பிராணி அடிக்கப்பட்ட - தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு எந்தநீதியும் பெற்றுக்கொடுக்க தேவையில்லாத - ஏதேட்சதிகாரமான ஒரு அரசுக்கு சிங்கள மக்கள் ஆணைவழங்க-

அதனை தங்கத்தாம்பாளத்தில் வாங்கிக்கொண்டு போய், தலதா மாளிகையில் பூப்போட்டு கிரீடம் சூடியிருக்கிறார்கள் கோட்டபாயவும் அவர் சகோதரரும்.

இவர்களின் ஆட்சி நடைபெறுவதற்கு சம்பிரதாய சபையாக இருந்து கொண்டிருக்கிறது இலங்கையின் நாடாளுமன்றம். இங்கு ஒப்புக்கு சப்பாணிபோல ஒரு எதிர்க்கட்சி,குரல் நாணைமுற்றாக அறுத்துவிட்ட சிறுபான்மை பிரதிநிதிகள்.

"போருக்கு பின்னர் சிறுபான்மையினத்தின் வலிகளை மாற்றுங்கள்" என்று உலகமே கேட்டுக்கொண்டிருக்க, கடந்த ஆட்சியின்போதிருந்த நல்லிணக்க அமைச்சு என்ற ஒரு அமைச்சையே பிடுங்கியெடுத்துவிட்டு, ஒரு கொலைகாரனுக்கே நாடாளுமன்றத்திற்குள் அழைத்து வந்து பதவிகொடுத்திருக்கிறார் கோட்டபாய.

இப்படிப்பட்ட ஒரு அவையிலிருக்கும் கதிரைகளை "சிங்களகதிரைகள்" என்றுசொல்லாமல் "சிங்காரகதிரைகள்"என்றா கூறமுடியும்?

இதில் எங்கே எதிரொலி நஞ்சுகக்கியது?

ஆஸ்திரேலியா ஒரு பல்லின சமூகம் வாழும் நாடு. இங்கே ஊடகங்களுக்கான ஜனநாயகமும் சுதந்திரமும் செழுமையோடு பேணிப்பாதுக்காக்கப்படுகிறது. உண்மைதான்.

இதிலிருந்து எதிரொலி தவறவுமில்லை. தவறவும் மாட்டது.

ஆனால், நல்லிணக்கம் என்ற ஒற்றைச்சொல்லின் ஊடாக உலகெங்கு முள்ள தமிழர்களுக்கு வகுப்பெடுப்பதற்கும் ஜனநாயம் பற்றிய கதாகாலேட்சபங்களையும் மேற்கொள்வதற்கு விரும்புகின்ற எந்ததரப்பினரும்,ஏன் அதனை சிங்களதரப்பினருக்கு போதிப்பதில்லை.

அடங்கி, ஒடுங்கி, அனைத்தையும் இழந்த ஒரு தரப்புக்குத்தான் எப்போதும் நல்லிணக்க வகுப்பெடுப்பதற்கு அங்கலாய்க்கிறார்கள். முருகபூபதிஉட்பட.

கொஞ்சம் உண்மையை உரத்துக் கூறினாலே அதில் நஞ்சுவாசம் வீசுவதாக மணந்து பிடிப்பவர்கள், உண்மையிலேயே ரத்தக்கறை படிந்தவர்களின் கரங்களைமீண்டும் மீண்டும் ஆசீர்வாதித்திற்கு உகந்தவையாக பற்றிக் கொள்வதில் அப்படி என்னதான் நியாயமிருக்கிறது?

விடுதலைக்காக மரித்தவர்களின் நிழலில் அரசியல் செய்கின்ற தேசியப்போக்கிரிகள், நாட்டுக்காக போராடியவர்களின் மீதுநஞ்செறிந்து இலக்கியம் எழுதுகின்ற போக்கற்றவர்கள் போன்ற எல்லாவகையான சாக்கிருமிகளின் மத்தியிலும் ஒரு ஊடகத்தை எவ்வாறு நடத்துவது என்ற கவனத்தோடுதான் எதிரொலி இக்களத்தில் பயணத்து வருகிறது.

ஆசிரியர்,

எதிரொலி



# Sai Shree Foods

Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

## REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

# ஆஸ்திரேலிய தேசிய கட்சிகளுடன் பேசக்கூடிய தமிழர் தரப்பு இன்னும் செயற்பாட்டில் இல்லை



## TAMIL FRIENDS OF LABOR TEAM துர்க்கா

கொரோனாவின் கோரத் தாண்டவத்தால் ஆஸ்திரேலியாவில் உயிரிழப்புகள்ஒருபுறம், பொருளாதார இழப்புகள் மறுபுறம் என நெருக்கடி பட்டியல் நீள்கின்றது. பலர் தொழில்களை இழந்து திண்டாடுகின்றனர். இந்த தேசிய நெருக்கடியிலிருந்து மக்களை மீட்டெடுக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, ஆஸ்திரேலிய குடியுரிமை மற்றும் நிரந்தர வதிவிடவாளர்களுக்கு அரசு பல நிவாரணத் திட்டங்களை முன்னெடுத்துள்ளது. இது சற்று ஆறுதலான விடயமாக இருந்தாலும், தற்காலிக விசா மற்றும் அகதி கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்கள் மற்றும் வெளிநாட்டு மாணவ விசாக்களில் தங்கியிருப்பவர்கள் அரச உதவியில் புறந்தள்ளப்பட்டுள்ளமை மிகவேதனைக்குரியதாகும்.

"கொரோனா பெருந்தொற்றுகாலத்தில் நாம் இந்நாட்டில் குடியுரிமை மற்றும் நிரந்தர வதிவுடமை உள்ளவர்களை மட்டுமே கவனத்தில் கொள்வோம். ஏனையோர் தமது தேவைகளை தாங்களே பூர்த்தி செய்துகொள்ளுங்கள். அது கடினமெனில் தாய்நாடு திரும்புங்கள்" - என்ற பொறுப்பற்ற அறிவிப்பை விடுத்து - இந்த நாட்டினை நம்பி வந்தவர்களை - மொறிசன் அரசு கைகழுவியுள்ளது. அரசின் இந்த மனிதநேயமற்ற முடிவுக்கு எதிராக பல அமைப்புகள் போர்க்கொடி தூக்கின, நீதிக்காக குரல் எழுப்பின. அத்துடன் நின்றுவிடாமல் கைவிடப்பட்டவர்களுக்கான உதவித்திட்டங்களையும் முன்னெடுத்தன. நிர்க்கதியானவர்களுக்கு இவ்வாறு நேசக்கரம் நீட்டிய அமைப்புகளில் ஒன்றான "TAMIL FRIENDS OF LABOR TEAM" என்ற அமைப்பின் அமைப்பாளர்களில் ஒருவரும் - லேபர் கட்சியின் நியூ சவூத்வேல்ஸ் மாநிலத்துக்கான இடதுசாரி பொறுப்பாளர்களில் ஒருவருமான (NSW LABOR LEFT- EXECUTIVE) திருமதி துர்க்காவை 'எதிரொலி' நேர்காணலுக்காகசந்தித்து கலந்துரையாடினோம்.

**எதிரொலி: "TAMIL FRINDS OF LABOR TEAM" என்ற அமைப்பு எப்போது ஆரம்பிக்கப்பட்டது? அதன் பிரதான நோக்கம் என்ன?**

பதில் – இந்த அமைப்பு உதயமாகி ஓராண்டுதான் ஆகின்றது. நானும், ரிசிகேசனும் இணைந்த கூட்டு தலைமையில்தான் இந்த அமைப்பு இயங்குகின்றது. இவ்வமைப்பு லேபர் கட்சிக்கு ஆதரவான அமைப்பாக இருந்தாலும், எமது சமுகம் சார்ந்தும் முன்னுரிமை வழங்கி செயற்படுகின்றது. இதன் காரணமாகவே கட்சி பேதங்களுக்கு அப்பால் பல தமிழர்கள் எங்களுடன் இணைந்துவருகின்றனர்.

**எதிரொலி: தமிழ் மக்கள் சார்பில் ஏற்கனவே பல அமைப்புகள் இயங்கும் நிலையில், எதற்காக இவ்வாறு புதியதொரு அமைப்பு உருவாக்கப்பட்டது?**

பதில் – அதற்கு சில காரணங்கள் உள்ளன. தேர்தலில் நான் வேட்பாளராக களமிறங்கியபோதுதான் இவ்வாறானதொரு அமைப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்தேன். குறிப்பாக, சீனர்கள் மற்றும் துருக்கியர்களை எடுத்துக்கொண்டால், அவர்களின் சமுகம் சார்ந்து, தேசிய கட்சிகளுடன் பேரம் பேசுவதற்கான பலமான அமைப்புகள் அவர்களிடம் உள்ளன. எமது சமுகத்தில் அவ்வாறானதொரு அமைப்பு இல்லை. 2009 இற்கு பிறகு தமிழருக்கு சார்பாக ஆஸ்திரேலிய தேசியக்கட்சிகளுடன் பேசக்கூடிய செயற்பாட்டு அமைப்பு இங்கு இயங்கவில்லை.

இலங்கையில் உள்நாட்டுப்போர் முடிவடைந்து 11 ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனாலும், எமது மக்களுக்கான தீர்வு கிடைக்கவில்லை. காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை உட்பட பல சிக்கல்கள் தொடர்ந்த வண்ணமுள்ளன. அவற்றை இங்குள்ள அரசாங்கத்திடம் எடுத்துரைத்து, மக்கள் பிரச்சினைகளை சர்வதேச மயப்படுத்துவதற்கும், அழுத்தங்களை பிரயோகிப்பதற்கும் இராஜதந்திர மட்டத்தில் செயற்படக்கூடிய அமைப்பும் இங்கு இல்லை.

நான் சார்ந்த கட்சியில் எமது அமைப்பு பலமாக இருந்தால், பேரம் பேசுவதற்கான ஆற்றல் அதிகரிக்கும். எம்மால் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படும். அவற்றை நிறைவேற்றுவதற்கான காத்திரமான நடவடிக்கைகள்கூட முன்னெடுக்கப்படும்.

அதேபோல், தமிழ்மக்களும் இந்த நாட்டின் வளர்ச்சியில் பங்குகொள்கின்றனர் என்பதை ஆஸ்திரேலிய சமுகமும் உணரவேண்டும். இவ்வாறான விடயங்களுக்காகவே புதிய அமைப்பு உருவாக்கப்பட்டது, உதவிகேட்பவர்களுக்கு பொருட்களை யார் வேண்டுமானாலும் வழங்கலாம், ஆனால் மேற்படி திட்டங்களை நிறைவேற்றுவதற்கு பலமான கட்டமைப்பு அவசியம். இவையே உங்கள் கேள்விக்கான பதில்.

**எதிரொலி: தமிழ்மக்களை ஓரணியில் திரட்டி முன்நோக்கி பயணிப்பதற்கு எவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன?**

பதில் – "வாருங்கள், வந்து எமது அமைப்பில் சேருங்கள்" - என நாம் தமிழ் மக்களுக்கு அழைப்பு விடுக்கவில்லை. எமது செயற்பாடுகள் ஊடாக அவர்கள் எம்மை அறிந்து தாமாக முன்வந்து இணையவேண்டும் என்பதே எமது எதிர்ப்பார்ப்பாகும்.

**எதிரொலி: கொரோனா தாக்கத்தின் பின்னர், அரசால் கைவிட்ட மக்களுக்கு எவ்வாறான உதவிகள் வழங்கப்பட்டன?**

பதில்: கடந்த பெப்ரவரி மாதம் முதல், எமது உதவித்திட்டங்கள் தொடர்கின்றன. உதவி தேவையானவர்களுக்கு, அவர்களின் தேவையறிந்து ஆரம்பத்தில் உதவி செய்யப்பட்டது. அப்போது அரசின் JOB KEEPER – JOB SEEKER கொடுப்பனவுகள் பற்றிய அறிவிப்பு வெளியாகியிருக்கவில்லை. பலர் தொழிலையும் இழந்திருந்தனர்.

இந்நிலையில், "உணவுப்பொருட்கள் தேவையெனில் தொடர்பு கொள்ளுங்கள்" - என ஒரு அறிவிப்பு வெளியிட்டிருந்தோம். தமிழர்களுக்கு மட்டுமே உதவி என்ற வரையறை இருக்கவில்லை. எவர் வேண்டுமானாலும் தொடர்புகொள்ளக்கூடிய விதத்திலேயே ஏற்பாடுகள் இடம்பெற்றன.

இதன்படி சீனா, நேபாளம், பங்களாதேஷ், இந்தியா போன்ற நாடுகளில் இருந்துவந்த மாணவர்கள் மற்றும் அபோறிஜினல் மக்கள் என மேலும் பலர் எங்களுடன் தொடர்பு கொண்டிருந்தனர். அத்துடன், 16 வயதுடைய - பெற்றோரைவிட்டு - தனியாக வேலை செய்து வாழ்பவர்களும் தொடர்பு கொண்டனர்.

ஆரம்பத்தில் இவர்களுக்கும் உதவிசெய்திருந்தோம். எனினும், அரசின் JOB KEEPER மற்றும் JOB SEEKER கொடுப்பனவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர், அகதி கோரிக்கையாளர்கள் மற்றும் மாணவ விசாக்களில் உள்ளவர்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

உதவி தேவைப்படுபவர்களிடம், அவர்களை தொடர்புகொண்டு, தேவையறிந்து, அதற்கேற்ற வகையிலேயே உணவுப்பொதிகள் தயார் செய்யப்படும். தன்னார்வ தொண்டர்களை நியமித்து, உரியவகையில் பொதி சென்றடைய நடவடிக்கை எடுக்கப்பட்டது

ஞாயிறுதோறும் அகதிகளுக்கான நாளாகவும், புதன்கிழமை மாணவர்கள் மற்றும் தற்காலிக விசாக்களில் உள்ளவர்கள் உணவு பொருட்களை பெற்றுக்கொள்ளும் நாளாகவும் பட்டியலிட்டோம்.

இதேவேளை, பிள்ளைகளின்றி தனிமையில் இருப்பவர்கள், கொரோனா அச்சத்தால் வெளியில் வரமுடியாத வயோதிபர்கள் எம்மை தொடர்புகொண்டு தமக்கு தேவையான பொருட்களை வாங்கித்தருமாறு கோருவர். அதனையும் நிறைவேற்றினோம்

**எதிரொலி: சரி, உதவிகளை முன்னெடுப்பதற்கான பொருட்கள் எவ்வாறு கிடைக்கின்றன? யாராவது உதவி செய்கின்றனரா?**

பதில்: ஆம், பணமாகவும், பொருட்களாகவும் கிடைக்கின்றன. தமிழ்மக்கள் மட்டுமன்றி ஆஸ்திரேலிய சமுகமும் எமக்கு உதவுகிறது. எமது அமைப்பிடம் வங்கி கணக்கு இல்லை, அதனால் பணமாக தருபவர்கள் TAMIL RESOURCE CENTER அமைப்பின் கணக்கிலக்கத்தின் ஊடாகவே பணம் அனுப்புகின்றனர்.

**எதிரொலி: உங்கள் அமைப்பின் உதவித் திட்டம் இது வரைக்கும் எத்தனை பேரை சென்றடைந்திருக்கும்?**

பதில்: கிழமைக்கு 3 ஆயிரம் டொலர்கள் பெறுமதியான உணவுப் பொருட்கள் அடங்கிய பொதிகள் தயார் செய்யப்படுகின்றன. இது வரையில் 600 பேர் வரை சென்றடைந்திருக்கின்றன. இந்த உதவி திட்டம் இன்னும் தொடர்கின்றது.

**எதிரொலி: உங்கள் அமைப்பால் முன்னெடுக்கப்படும் உதவித்திட்டத்தில் எத்தனை பேர் இயங்குகின்றனர்? அவர்களின்பாதுகாப்புஉறுதிப்படுத்தப்பட்டுவிட்டதா?**

பதில்- கொரோனா தொற்று காரணமாக எமது தன்னார்வ தொண்டர்களை மட்டுபடுத்தினோம். பொருட்களை கொள்வனவு செய்வது, பொதி செய்வது ஆகியவற்றில் பத்து பேரே செயற்பட்டோம். அதே வேளை, விநியோகம் செய்வதற்கு பலர் முன்வந்திருந்தனர். சுகாதாரத்துக்கு முன்னுரிமை வழங்கி முப்பது பேர்வரையே அனுமதித்திருந்தோம். கொரோனாவிலிருந்து பாதுகாத்துக்கொள்ள அரசு, நடைமுறைப்படுத்திய அனைத்து விதிமுறைகளையும் பின்பற்றியிருந்தோம்.

விநியோகம் செய்வோர்களிடம், உதவி பெறுபவர்களது வீடுகளின் கதவருகே பொருட்களை வைத்துவிட்டு வருமாறே பணித்திருந்தோம்.

**எதிரொலி: அரசியலில் உங்களை நிலை நிறுத்திக்கொள்வதற்கும், வளர்ச்சியடைவதற்காகவுமே இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றீர்கள் என உங்கள் தொடர்பாக ஒரு விமர்சனம்முன்வைக்கப்படுகிறதே?**

பதில்: இல்லை, இங்குள்ள பத்திரிகைகள் என்னிடம் நேர்முகம் கேட்டிருந்தன. ஆனால் ஒரு பத்திரிகைக்குக்கூட நான் வழங்கவில்லை. அகதிகளுக்கும், மாணவ விசாக்களில் உள்ளவர்களுக்கும், தற்காலிக விசாகளில் உள்ளவர்களுக்கும் உதவி செய்வதன் ஊடாக எனக்கு வாக்கு கிடைக்கப்போவதில்லையே.

இதேபோல இது விருது வாங்குவதற்கான முயற்சியா என மேலும் சிலர் கேட்கின்றனர், நான் சமுக சேவைக்கான விருதை 20 வயதிலேயே பெற்றுவிட்டேன். எனது சமூக சேவை என்பது 14 வயதில் ஆரம்பித்துவிட்டது. ஆஸ்திரேலிய சமுகம் என்னை சமுக சேவையாளராகவே பார்க்கிறது. ஆகவே சமுகம் சார்ந்த சேவையை அரசியல் என்ற எண்ணம் உருவாவதற்கு முன்னரே ஆரம்பித்துவிட்டேன்.

**எதிரொலி: தமிழ் சமுகத்தை தாண்டி ஆஸ்திரேலிய சமுகத்துக்கான சேவையில் உங்கள் அமைப்பின் பங்களிப்பு எவ்வாறு இருந்துள்ளது?**

பதில்- எமது மாநிலத்தில் கடந்த வருடம் மற்றும் இந்த வருட முற்பகுதியில் காட்டுத்தீ பரவலால் கணிசமான மக்கள் இடப்பெயர்வை சந்தித்திருந்தனர். இந்நிலையில், அந்த பகுதிகளுக்கு நேரில்சென்று அவர்களுக்கான உணவுகளை தயரித்து வழங்கியிருந்தோம். அவர்கள் தங்கியிருந்த பாடசாலைகளுக்கு தேவையான போர்வைகள், உடைகளை போன்றவற்றை வழங்கியிருந்தோம்.

அத்துடன், தீயணைப்பு படைவீரர்களுக்கான உணவுகளை வழங்கினோம். அவர்களின் குடும்பங்களுக்கு தேவையான ஒத்துழைப்புகளை வழங்கினோம்.

அதேவேளை எமது பகுதியை சேர்ந்த இரு தீயணைப்பு வீரர்கள் இறந்திருந்தனர். அவர்களின் குடும்பங்களை நேரடியாக சந்தித்து ஆறுதல் தெரிவித்தோம். அவர்களுக்கான தேவைகளை அறிந்து பூர்த்தி செய்தோம். ஆஸ்திரேலிய சமுகத்தில் தமிழர்களின் பங்களிப்பு தொடர்ந்துகொண்டேதான் இருக்கும். இப்படி பல விடயங்களைக் குறிப்பிடலாம். ■

# வீட்டிற்கு வெளியே ஏற்படும் நெருக்கடி வீட்டிற்குள் இடம்பெறும் வன்முறைக்குக் காரணமாக இருக்கக்கூடாது.

குடும்ப வன்முறை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல

## உங்களுக்கு உதவுவதற்கான சேவைகள் உள்ளன

'ஆடவர் உதவி இணைப்'(MENSLINE) பினை அழையுங்கள்

**1300 78 99 78**

MENSLINE.ORG.AU/LANGUAGES

உங்களுடைய செய்கைகள் அல்லது உறவுகளைப் பற்றி நீங்கள் கவலைப்பட்டுக்கொண்டிருந்தால், உங்களுக்கு உதவுவதற்கான சேவைகள் உள்ளன. ஆடவர்களுக்கான இலவச மற்றும் இரகசிய அறிவுரை மற்றும் ஆதரவுதவியை எந்த நேரத்திலும் பெறுங்கள்.

வேறொரு மொழியில் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், 131 450-ஐ அழையுங்கள்.



Australian Government

Authorised by the Australian Government, Canberra.



# அண்ணனை பிரிந்த தம்பிகள் அச்சிழுந்து ஆடும் கட்சிகள்!

## 'நாம் தமிழர்' - 'முன்னணி'

## பிரிவும் சரிவும்: ஒரு ஆய்வு

எதிரொலிக்காக
இராஜராஜன்

ஈழத்தமிழர் அரசியலில் இன்றைய காலகட்டத்தில் தம்மை தமிழீழ விடுதலைப்புலிகளின் நீட்சியாகக் காட்ட எத்தனித்துக் கொண்டிருக்கும் கட்சி "இலங்கைத் தமிழ் கொங்கிரஸ்"என்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி. தமிழகத்தில் பிரபாகரனை முன்னிறுத்தி அரசியல் செய்வது "நாம் தமிழர்"கட்சி.இந்த இரு கட்சிகளுமே தத்தமது வாக்கு வங்கியை அதிகரித்தே வருகின்றன என்பது உண்மைதான். அதேநேரம்,இரு கட்சித் தலைமைகளுடன் முரண்பட்டு முக்கிய உறுப்பினர்கள் வெளியேறுவதும் தொடர்கின்றன.

சமீபத்தில் "நாம் தமிழர்"கட்சியிலிருந்து பேராசிரியர் கல்யாணசுந்தரம் வெளியேறியதும், முன்னணியிலிருந்து சட்டத்தரணி மணிவண்ணன் வெளியேற்றப்பட்டதும் இணைய வெளியில் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தன.

சி.பா ஆதித்தனாரின் "நாம்தமிழர்" பேரியக்கத்தின் இரண்டாம் பதிப்பாக வந்த நாம் தமிழர் கட்சியும் கொங்கிரசின் புதிய மொந்தையாக வந்த முன்னணியும் 2009 மே மாதத்தின் பின்னர் - புலிகள் இல்லாத அரசியல் வெளியில் - அவர்களின் தொடர்ச்சியாகத் தம்மைக் காட்டி உருவானவை.

"நாம் தமிழர்" கட்சித் தலைவர் சீமானாவது போராட்டம், சிறை என்று அல்லாடி வதைபட்டார். ஆனால், முன்னணியினரோ விடுமுறை தின போராட்டங்களில் புகைப் படத்துக்கு 'போஸ்' கொடுப்பதும், ஊடக அமையத்தில் 'பிரஸ் மீட்' நடத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை குறை கூறுவதுமாகவே கட்சி நடத்தி வந்தனர்.

பொதுவாக, வாக்காளர் யார் ஆட்சிக்கு வரவேண்டும்என்பதைவிட, யார் ஆட்சிக்கு வரக்கூடாது என்றே வாக்களிப்பது வழக்கமாகி விட்டது. கூட்டமைப்பின் உள்முரண்பாடுகளால்எழுந்த கோபத்தாலும்இலங்கையின் விகிதாசாரத் தேர்தல் முறையினாலும் இன்று முன்னணி இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெற்று விட்டது.

இதுபோல, இந்திய மத்திய அரசின் பலவந்த தலையீடுகளால் கொதித்துப் பேயும் திராவிடக் கட்சிகளின் கையாலாகாத் தன்மையால் கோபமும் கொண்டுள்ள தமிழக மக்கள் அடுத்த வருடம் நடக்கவுள்ள சட்ட சபைத் தேர்தலில் நாம் தமிழர் கட்சியையும் சட்டமன்றத்துக்கு அனுப்பி வைக்க வாய்ப்புகளுள்ளன.

ஆனால் தலைமைகளின் சர்வாதிகாரப் போக்கு, இவ்வாறு தானாக வந்துவிழுகின்ற பிரகாசமான வாய்ப்புகளையும் ஊதி அணைத்து விடுமோ என்று அக்கட்சிகளின் நலன் விரும்பிகளை கவலைகொள்ள வைத்துள்ளது.

இதற்குமுன்னர்,கொங்கிரஸ்மூத்ததலைவர்களில் ஒருவரான சட்டத்தரணி விநாயகமூர்த்தி, பொருளியல் ஆசான் வரதராஜன் போன்றவர்கள் கட்சியோடு முரண்பட்டு வெளியேறியிருந்தனர். நாம் தமிழரிலிருந்தும்கூட வியனரசு உட்பட பலரும் வெளியேறியதும் ஒதுங்கியதும் உண்டு.

அப்போதெல்லாம்இந்தளவுக்குபரபரப்பு எழுந்ததில்லை. இப்போது மட்டும் ஏனிந்தப் பரபரப்பு?

தற்போது முரண்பட்ட இருவருமே இளையவர்கள். பிரபலமானவர்கள். பகுதிநேர அரசியல்வாதிகள். கல்யாணசுந்தரம் ஆசிரியராக'சோக்இருந்தால்உழைப்பேன்', என்று செவ்விகளில் சொல்வது வழக்கம். மணிவண்ணனோ பிரபல சட்டத்தரணி. ஆகவே, இருவருமே மனதில் நினைப்பதை பட்டென்று சொல்லி விடுவதே கட்சிக்கு பிரச்சினையாகி இருக்கிறது என்கின்றன உள்வீட்டுத் தகவல்கள்.

கல்யாணசுந்தரம் சீமானால் கவரப்பட்டு தானாக நாம்தமிழர் கட்சிக்கு வந்தவரல்ல. முன்னதாக, கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்தவர், தற்போது, கட்சியை விட்டு வெளியேறிவிட்ட இன்னொருவரான சட்டத்தரணி ராஜீவ் காந்திதான் அவரை கட்சிக்குள் அழைத்து வந்தார்.

மணி கதையும் கிட்டத்தட்ட இதே போன்றதுதான். அவர் தனது சட்டத்துறை நண்பர்கள் சிலரை சேர்த்துக்கொண்டு - 2009 க்குப் பின் - கூட்டமைப்பின் மீதான அதிருப்தியால் மாற்று வேட்பாளர்களை சுயேட்சையாகநிறுத்தமுயற்சித்துக்கொண்டிருந்தார் என்று சொல்லப்படுகிறது.அப்போதுதான், யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் மணிவண்ணனை கஜேந்திரர்கள் தரப்புக்கு அறிமுகப்படுத்தி விட்டாராம். சட்டத்தரணியான மணிவண்ணன் கிரிக்கெட் வீரரும்கூட. யாழ். மத்திய கல்லூரியின்பழைய மாணவர்வேறு. அதனால், அவருக்கு பெரிய நட்பு வட்டாரங்கள்இருந்தன. அதுவே, "கஜேந்திரர்கள்" அவரை இருகரம் நீட்டி அரவணைக்கப் போதுமாக இருந்தது.

ஏற்கனவே, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் பழம்பெரும் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னம் இருப்பதனால், அதைவிட பழம்பெரும் கொங்கிரசும் சைக்கிள் சின்னத்தை வைத்துக்கொண்டு - தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனிக் கட்சியாகப் பதியாமல் - வாக்குச்சீட்டில் கொங்கிரசாகவும் போஸ்டருக்கு முன்னணியாகவும் காலம் கடத்தியதின் சூக்குமமாகச் சொல்லப்படுகிறது.

அத்துடன், ஏற்கனவே ஜீஜீ குடும்பத்தை விட்டு சட்டத்தரணி விநாயகமூர்த்தி கையில் கட்சியைக் கொடுத்துவிட்டு பட்ட பாடுகளும்கஜேந்திரகுமாரை இந்த முடிவுக்குள் தள்ளியிருக்கக்கூடும்.

எது எப்படியோ, இரு கட்சிகளுமே வளர்ந்துவரும் நிலையில் முக்கியஸ்தர்கள் - அதிலும் கட்சிசாரா வாக்காளர்களிடம் வரவேற்புப் பெற்றவர்கள் - தலைமைகளுடன் முரண்பட்டு, கட்சிகளை விட்டு அகல்வது அல்லது அகற்றுப்படுவது துரதிர்ஸ்டவசமானது என்கின்றனர் அவதானிகள்.

சீமானின் ஆமைக்கறிக்கதையும் கஜேந்திரனின் 40ஆயிரம் சவப்பெட்டிக் கதையும் அடித்தட்டு வாக்காளர்களைக் கவரக்கூடும். ஆயினும் அறிவுபூர்வ வாக்காளர்களைக் கவரக்கூடிய கல்யாணசுந்தரம், மணிவண்ணன் போன்றவர்களின் வெளியேற்றம் கட்சிகளுக்கு நீண்டகால நோக்கில் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்பதே அரசியல் ஆய்வாளர்களின் கருத்து.

இந்த இடத்தில்தான் முக்கியமான கேள்வி எழுகின்றது.சுமார் அதாவது, பத்து வருடங்களுக்கும் மேலாக ஒன்றாகப் பயணித்தவர்களிடையே எழுந்த முரண்பாடுகளை கதைத்துப் பேசி சரி செய்திருக்க முடியாதா?. என்பதே. அந்தக்கேள்விக்கு பதில் தரும்போது,"மனமிருந்தால்தானே மார்க்கமிருக்கும்" - என்கின்றனர் கட்சி அனுதாபிகள்.

இவற்றின் பின்னணியில் "அரூபக்கரங்கள்"இருப்பதாக தகவல்கள் கசிந்தன.அவை யென்ன?

2016 சட்டமன்றத் தேர்தலில் தோல்வியடைந்த திமுகவுக்கும் வெற்றி பெற்ற அதிமுகவுக்கும் இடையிலான வாக்கு வித்தியாசம் 1.1 சதவீதம். அதேதேர்தலில் "நாம் தமிழர்" கட்சி பெற்ற வாக்குகளும் 1.1 சதவீதம். இதன்படி, தமது வெற்றியை "நாம் தமிழர்" கட்சியே குழிதோண்டி புதைத்ததாக திமுகவினர் அன்று தொடக்கம் நம்புகின்றனர். அதிலும்,"வரும்சட்டசபை தேர்தலில் தமது வெற்றி வாய்ப்பை நாம் தமிழர் கட்சி குலைக்கும்" - என்று திமுக நம்புகிறது..ஆக அன்றிலிருந்து இன்று 4 வீத வாக்குகளைப் பெறத் தொடங்கிவிட்ட "நாம் தமிழர்"கட்சியை சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் பிளந்துவிடத் துடிக்கிறது திமுக.

(11ஆம் பக்கம் பார்க்க)





# அண்ணனை பிரிந்த தம்பிகள் அச்சிழந்து ஆடும் கட்சிகள்!

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

போதாதற்கு,இனத் தேசிய உணர்வை தமது பிழைப்பில் விழும் அடியாகக் கருதும் முதலாளித்துவ ஊடகங்கள் சீமானை கவிழ்க்க கங்கணம் கட்டி நிற்கின்றன. உதாரணமாக,தேர்தல் கருத்துக் கணிப்பில் "நாம் தமிழர்"கட்சியை 'பிற கட்சிகள்" என்ற பகுதிக்குள்ளேயே "விகடன்" தொடக்கத்தில் அடக்கியது.

இந்தநிலையில்,"நாம்தமிழர்"கட்சிக்குள் ஏற்படும் சிறு ஓட்டையையும் விரலை விட்டு ஆட்டி,பெரிய கிழிசலாக்குவதில் இந்தத் தரப்புகள் கண்ணாயிருக்கின்றன.

கல்யாணசுந்தரம் விவகாரத்தில், விகடனில் வெளியாகிய அநாமதேயக் கடிதமொன்றிலேயே விவாகரம் வெளிச்சமானது. திமுக அனுதாபிகளென கருதப்படும் சவுக்கு சங்கர்,சுந்தரவள்ளி ஆகியோர் தமது பங்கிற்கு,எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்தனர். கல்யாணசுந்தரத்தின் செவ்வியை 'விகடன்' காவித் திரிந்து விசிறி விட்டது. இறுதியாக,"நாம் தமிழர்" கட்சியின் முக்கிய உறுப்பினர் பேராசிரியர் கல்யாணசுந்தரம் கட்சியை விட்டுத் தானாக வெளியேறினார்.

முன்னணியிலோ கதை வேறு என்கிறார் அரசியல்வாதிகளுடன் நெருங்கிப்பழகும் ஊடகவியலாளர் ஒருவர். ஜீஜீ பொன்னம்பலத்தின் மருமகள், குமார் பொன்னம்பலத்தின் துணைவி என மூன்று தலைமுறையாக கொங்கிரஸையும் சைக்கிள் சின்னத்தையுமே பார்த்துவந்த கஜேந்திரகுமாரின் தாயாரின் முடிவுகள் முன்னணியின் செல்நெறியில்அதிகதாக்கத்தைசெலுத்துவதாகசொல்கிறார் அவர். அதிலும், அவரது சொல்லை மகன் கஜேந்திரகுமாரைவிட,தொண்டன் கஜேந்திரனே அதிகம் தலையில் தாங்குவதாக உட்கட்சித்தகவல்கள் கூறுகின்றன.

கொங்கிரஸ் கட்சியும் சைக்கிள் சின்னமும் தமது குடும்பத்தை விட்டுச் சென்று விடக்கூடாதுஎன்பதில்கவனமாகஇருக்கும் கஜேந்திரகுமாரிடம், கட்சியிலுள்ள சிலர் "போட்டுக்கொடுத்தே" பலரை வெளியேற்றுவதாகவும் கூறப்படுகிறது.மணிவண்ணன் வெளியேற்றமும் இத்தகையோரின் "கைங்கரியமாகவே" பார்க்கப்படுகிறது.

பல்வேறு வழக்குகளில் சிக்கிய சீமான் கடவுச்சீட்டு முடக்கப்பட்டு, சிறையும் கட்சியுமாக அலைந்துகொண்டிருந்தபோது, வெளிநாடுகளில் தொடர்புகளை பேணவும்கட்சிக்கிளைகளைபரப்பவும்அனுப்பப்பட்ட ஊடகவியலாளர் அய்யனாதன், பேராசிரியர் கல்யாணசுந்தரம் போன்றோர் புலம்பெயரிகளின் உபயகாரர் மனப்பான்மையால் மண்டை கழுவப்பட்டு, தனி தலைமையாக உருவாக முயற்சித்ததாக ஒரு சந்தேகம் "நாம் தமிழர்" வட்டாரத்தில் உலாவுகிறது. அதேவேளை, புலனாய்வு அமைப்புகள்புலம்பெயரிகள்ஊடாக"நாம் தமிழர்"கட்சியைபலவீனப்படுத்ததொடர்ந்து முயற்சிப்பதாகவும் சந்தேகம் உண்டு.

இது ஒருபுறமிருக்க, புலம்பெயரிகளின் ஸ்பொன்சரில் நடக்கும் அமைப்புகளில் ஒரு கடுப்பு நிலவுவதையும் இங்கு குறிப்பிட்டாகவேண்டும். "பணத்தைக்கொடுக்கிறாங்க என்பதற்காக இதைப் பேசாதே அதைப் பேசு என்று எங்களுக்கே உத்தரவு போடுறாங்கபாஸ்.களத்திலநிற்கிறஎங்களுக்குத்தானே எங்க மக்களுக்கு எது தேவை என்று தெரியும்' - என்று புலம்புகின்றன அந்த அமைப்புகள்.

முன்னணியில், கஜேந்திரகுமாரின் தாயார்கள யதார்த்தத்தை புரிந்துகொள்ளாமல், கட்சியை நடத்துவதற்கு ஆலோசனை வழங்குவது போன்றே, புலம்பெயரிகள் நாம் தமிழரை வழிநடத்த முற்படுவதாக கருத்து நிலவுகிறது.

இன்னொரு பக்கத்தில் பார்க்கும்போது, இரு கட்சி தலைமைகளுமே வடக்கு - தெற்காக திடீரென்று தமது முடிவுகளை மாற்றிக் கொள்வதை வழக்கமாக்கிக் கொண்டவை.

2011இல் அதிமுகவை ஆதரித்த"நாம் தமிழர்" கட்சி,2016 இல் ஜெயலலிதாவை எதிர்த்தது. இதனை,சீமானின் தம்பிகள் கேள்வி கேட்காது ஏற்றுக் கொண்டார்கள்.

முன்னணியும் தேர்தல் பகிஸ்கரிப்பென்று சொல்வதும் பிறகு தேர்தல்களில் நிற்பதுமாக முடிவெடுப்பது வழமையானது.

இந்தவிடயத்தில், கல்யாணசுந்தரத்திடமிருந்து மணிவண்ணன் வேறுபடுகிறார் என்பதை இங்கு குறிப்பிட்டாகவேண்டும்.

சீமானின் முடிவுகளை செவ்விகளில் நியாயப்படுத்தினார் கல்யாணசுந்தரம். ஆனால், மணிவண்ணன் கேள்விகேட்கத் தொடங்கினார். முன்னணியின் இணைத் தலைமைகளில் தானுமொருவர் என்ற நினைப்பே, அவரை எதிர்த்து கருத்துச் சொல்ல வைத்ததாகவும் ஆனால் கஜேந்திரகுமார் அதனை இரசிக்கவில்லை என்றும் மணிக்கு நெருக்கமான சட்டத்தரணி ஒருவர் கூறினார்.

முன்னணியை தனிக் கட்சியாகப் பதிவு செய்ய வலியுறுத்திய மணிவண்ணனுடன் கஜேந்திரகுமாருக்கு வார்த்தை தடித்தது கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது என்றார் முன்னணியின் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது, பல்கலைக்கழக மாணவர்கள் தமிழ்க் கட்சிகளிடையேபொதுஇணக்கப்பாட்டைஏற்படுத்த பேச்சுகளை நடத்தினர். இறுதியாக, முன்னணி வெளியேற, மற்றைய 5 கட்சிகள் பொது உடன்பாட்டில் கையெழுத்திட்டன.

அப்போது - ஜனாதிபதித் தேர்தலை பகிஸ்கரிக்க முன்னணி முடிவெடுத்த சமயம் - பொது உடன்பாடு பற்றி பல்கலைக்கழக மாணவர்களின் அறிவிப்பு வெளிவந்த பின்னர், பகிஸ்கரிப்பினை அறிவிப்பதே பொருத்தமென மணிவண்ணன் வற்புறுத்தியதாகவும், இதில் வார்த்தைகள் தடித்து 'பூகோளமும் பு...ஷ்பமும்" - என்ற தொனியில் மணி வார்த்தைகளை விட்டதாகவும் சொல்லப்படுகிறது.இதன்பிறகு கடந்த நாடாளுமன்றத் தேர்தலில், மணி போட்டியிட மறுத்ததாக தொலைக்காட்சி செவ்வியில் தெரிவித்திருந்தார். அப்போது, கஜேந்திரர்கள் மணிவண்ணனுக்கு நெருக்கமான பலரிடம் தேர்தலில் போட்டியிட மணியை சம்மதிக்க வைக்கும்படி வீடுகளுக்கே சென்று வற்புறுத்தியதாக சம்பந்தப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

இதில் சீமான் வேறுபடுகிறார். கல்யாணசுந்தரத்தையும் ராஜிவ்காந்தியையும் சமாளித்து கட்சியிலேயே வைத்திருந்துவிட்டு, தேர்தல் முடிந்தபிறகு கழட்டிவிடாமல், துணிச்சலாக இப்போதே அவர்களுக்கு எதிராக அண்ணன் நடவடிக்கை எடுத்ததை கட்சியினர் பாராட்டுகின்றனர்.

முன்னணி சறுக்கியதே இந்த இடத்தில்தான். கட்சி முடிவுக்கு கட்டுப்படாவிட்டால் மணியை அப்போதே விலக்கி விட்டிருக்கவேண்டும். ஆனால், அவரை வற்புறுத்தி தேர்தலில் போட்டியிட வைத்து, இரு இடங்கள் கிடைத்த பிறகு, கட்சியை விட்டு வெளியேற்றுவது நியாயமா என்று மணிவண்ணன் ஆதரவாளர்கள் பொங்குகிறார்கள். இதில் விழுந்தெழும்பி காயப்பட்டது போதாதென்று, தேர்தலுக்குப் பின்னர் மணிவண்ணன் முகத்தில் கரிபூச முயற்சித்த முன்னணித் தலைமை கடைசியில் முகப்புத்தகத்தில் கிண்டல் - கேலிக்கு ஆளாகி வருகிறது.

தேர்தலின்பின்னர்,எம்பிகளாகிய கஜேந்திரர்கள்மக்கள்சந்திப்புகளைநடத்தியிருக்கிறார்கள். அந்தச் சந்திப்புக்களில் மணிவண்ணன் கலந்து கொள்ளவில்லை. அல்லது, அவர் அழைக்கப்படவில்லை. இவ்வாறு இணுவிலில் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டம் இளைஞர்கள் சிலரால் குழப்பப்பட்டதாக செய்திகள் வெளியாகின. அதனைச் செய்தது 'ஆவா குரூப்பே" என்றும் அவர்கள் கதிரைகளை உடைத்தும் தாக்கியும் குழப்பினார்கள் என்றும் முன்னணி சொல்லத் தொடங்கியது. ஆனால், 'ஆவா குரூப்" என்பது படையினருடன் நெருக்கம் பேணுகின்ற இளைஞர் குழு என்ற பொதுப்புத்தி யாழ்ப்பாண மக்களிடையே நிலவுகிறது. (அதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்பது வேறு விடயம்) இதன்படி, மணிவண்ணனுக்கு ஆதரவாக படையினரின் ஆதரவுடன் ஆவாகுழு முன்னணியின் கூட்டங்களிக் குழப்புகிறது என்ற தோற்றத்தை உருவாக்க முயற்சிக்கப்பட்டதாகவே பலரும் கருதுகின்றனர்.

இந்த நிலையில்தான், அப்பகுதியைச் சேர்ந்த மணியின் ஆதரவு இளைஞர்கள் சிலர் ஏன் கூட்டத்துக்கு மணிவண்ணனை அழைக்கவில்லை என்று கேட்டு விவாதித்தனரே தவிர,கூட்டத்தைக் குழப்பவில்லை என்பதும் மோதலோ சேதமோ ஏற்படவில்லை என்றும் உண்மைநிலை சமூக ஊடகங்களில் பகிரப்பட்டது.

மற்றய கட்சியினர் எல்லோரும் மோசமானவர்கள் என்றும் தாங்கள் மட்டுமே சுத்தமாக சூசைப்பிள்ளைகள் என்றும் பிடிவாதமாக நிற்கும் நாம் தமிழர் கட்சியும், முன்னணியும் இவ்வாறு ஆளாளுக்கு வேட்டியை உரிந்துகொண்டு மக்களின் முன்பாக நிர்வாண ஓட்டங்களை நடத்துவது கட்சி ஜனநாயகத்துக்கு மாத்திரமல்ல, அவர்களது எதிர்கால அரசியலுக்கே பெருங் கேடு. சொல்லப்போனால், இவ்வாறான சந்தர்ப்பங்களில்தான் ஒவ்வொருவரினதும் ஆளுமை பண்பும் அரசியல் பக்குவமும்கூட வெளிப்படுகிறது. இவையனைத்தும்கூட, மக்கள் மத்தியில் கட்சிகள் தொடர்பான நிலைப்பாடுகளாக மாறுகிறது.

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI



# ‘கோவிட்’ முடியும்வரை காத்திருக்கும் கோவில் கும்பாபிஷேகமும் பிள்ளையாரும்

## மெல்பேர்ன் விநாயகர் ஆலய புனருத்தாரணத்தின் பின்னணி

## $ நாற்பது லட்சம் செலவில் கருங்கல் சந்நிதானங்கள்

விக்டோரியாவில் மெல்பேர்ன் மாநகர் கடந்த முப்பது வருடங்களில் அடைந்த வளர்ச்சி மிகப் பெரியது. பல்லின மக்கள் வாழக் கூடிய ஒரு பெரும்தேசமாக - இனங்களுக்குரிய பல்வேறு தேவைகளை தன்னகத்தே உருவாக்கிக் கொண்டதாக - மெல்பேர்ன் அடைந்த இந்த பல அடுக்கு முன்னேற்றம் கடந்த முப்பது - நாற்பது ஆண்டுகளுக்குள் இடம் பெற்றதுதான். இப்பேற்பட்ட வளர்ச்சியும் தான், மெல்பேர்னை உலக அளவில் மிகப்பிரசித்திபெற்ற வாழ்நிலமாக ஒளிரச் செய்துகொண்டிருக்கிறது.

இந்த சௌந்தர்ய பூமியில் ஈழத் தமிழர்கள் கண்ட வளர்ச்சி எவ்வகையானது என்று கேட்டால் அதற்கு பெருமைக்குரிய பல விடைகள் இருக்கின்றன. ஈழத்தமிழர்களில் பெரும்பகுதியினர் எண்பதுகளின் ஆரம்பத்தில் பல்வேறு வழிகளில் மெல்பேர்னுக்கு புலம்பெயர்ந்திருந்தார்கள். அவற்றில் முக்கியமானது, சிறிலங்காவிலிருந்து இடம்பெற்ற புலம்பெயர்வு. மற்றையது, பிரித்தானியாவிலிருந்து இடம்பெற்றது.

இவ்வாறு புலம்பெயர்ந்து வந்த மக்கள் டொலர் ஈட்டும் வழிமுறைகளை கடைப்பிடித்ததற்கு அப்பால், மத ரீதியாக இந்த நிலத்தில் வழிபாட்டிடங்களை உருவாக்க வேண்டும், அதனை தமக்குரிய அடையாளங்களாக கட்டியெழுப்பவேண்டும் என்பதற்காக மேற்கொண்ட முயற்சிகள் துணிச்சல் மிக்கவை. இன்று நினைத்தாலும், பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தக்கூடியவை. ஏனெனில், இந்த நாட்டுக்கு தொடர்ந்து எவ்வளவு மக்கள் வரப்போகிறார்கள் என்று தெரியாமலும் இந்த வழிபாட்டிடங்கள் தங்களுக்கு எவ்வகையான எதிர்கால செலவுகளை ஏற்படுத்தப்போகிறது என்ற அச்சம் எதுவும் இல்லாமலும் பல்லாயிரக்கணக்கான டொலர்களை இந்த வழிப்பாட்டிடங்களின் உருவாக்கத்துக்கு செலவுசெய்திருக்கிறார்கள். உண்மையில்,அவர்களது இந்த முன்னெடுப்பு பிரம்மிப்பானது.

புதிய தேசமொன்றுக்கு செல்கின்ற ஒரு இனம் தமக்கான இருப்பை அரிவரியிலிருந்து ஆரம்பித்து கட்டியெழுப்புவதென்பது சிம்பிளான விஷயமல்ல. அதுவும் வருங்காலத்தின் நலன்களையும் கருத்திற்கொண்டு செயற்படுவதெல்லாம் மிகச்சவாலானது.

இந்தப் பேருழைப்பின் வரிசையில், சைவக் கோயில்களை உருவாக்குவதில் மெல்பேர்னில், கடந்த காலங்களில் இடம்பெற்ற சம்பவங்களினை சற்று பின்னோக்கி சென்று பார்வையிட்டுவருவதின் ஊடாக, தற்போது மெல்பேர்னில் உள்ள பிரசித்திபெற்ற விநாயகர் ஆலயம் ஒன்றின் புனருத்தாரணம் பற்றிய செய்தியை ஆய்வுக்கு உட்படுத்துவது இந்தப்பத்தியின் நோக்கமாகும்.

மெல்பேர்ன் கிழக்கு பகுதியில் ‘பேஸின்’ பிரதேசத்தில் அமைந்துள்ள வக்ரதுண்ட விநாயகர் ஆலய புனருத்தாரண வேலைகள் நிறைவடைந்து கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. கிட்டத்தட்ட எல்லா வேலைகளும் நிறைவடைந்து, நல்லகாரியம் நடைபெறும் தறுவாயில், கும்பாபிஷேக திகதியை கொரோனா கவ்விச்சென்றுவிட்டது. இப்போது, சரியான சூழ்நிலையொன்றுக்காக காத்திருப்பதாக ஆலய நிர்வாகம் அறிவித்திருக்கிறது.

இந்த ஆலயத்தின் புனருத்தாரணம் வெறுமனே, அங்கே இடித்து இங்கே செதுக்கி சாதுவான சிணுங்கல் வேலைகளுடன் செய்யப்படவில்லை. சுமார் 40 லட்சம் டொலர் செலவில் விநாயகரின் மூலஸ்தானம் உட்பட உள்பிரகாரத்திலுள்ள பதினொரு சந்நிதானங்களும் கருங்கல்லில் செதுக்கியெடுக்கப்பட்டு, மிகப்பெரிய பொருட்செலவிலும் பல நூற்றுக்கணக்கான சிற்பிகளின் உழைப்பிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.



தஞ்சைப்பெருங்கோயிலின் சிற்பவேலைப்பாடுகளுக்கு இணையாக, பென்னாம் பெரிய கருங்கற்களில் செய்தெடுக்கப்பட்டுள்ள பக்திச்சின்னங்கள் இவை. ஒவ்வொரு கருங்கல்லும் கிட்டத்தட்ட 250 முதல் ஆறாயிரம் கிலோ எடையுள்ளவை. ஆண்டாண்டு காலத்துக்கும் நீடித்து நிலைக்கக்கூடியதாக திட்டமிட்டுள்ளது மாத்திரமல்லாமல், சமய ரீதியில், இந்தக்கற்களில் மந்திர ஒலிகள்தெறித்து எழும்புகின்ற சத்தம், கோவில் முழுவதும் பக்தி அதிர்வினை கொண்டுசெல்லவேண்டும் என்பதற்காக, முறையான திட்டமிடலுடனும் ஆசாரமாக - ஆகம ரீதியாக - கவனமெடுக்கப்பட்டிருக்கிறது.

கோவிலின் மூலஸ்தானம் மாத்திரம் நானூறு கருங்கற்களினால் 17 அடுக்குகளுடன் பல கோணங்களில் - பல நுணுக்கமான - சிறப்பான - சிற்ப வேலைப்பாடுகளுடன் - நிர்மாணிக்கப்பட்டுள்ளது. ஏனைய பத்து சந்நிதானங்களும் இந்திய கோவில்களிலுள்ள சிற்பவேலைப்பாடுகளுக்கு இணையாக - மிக நேர்த்தியாக - கடும் உழைப்போடு -மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதற்காக, தமிழகத்தில் மஹாபலிபுரத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் ஆயிரம் கருங்கற்களில், பல தேர்ந்த சிற்பிகள் பணியாற்றியிருக்கிறார்கள். பெருங்கலைஞர்களின் கைவண்ணத்தில் கீர்த்திபெற்ற கற்கள் அனைத்தும் பூர்த்திசெய்யப்பட்ட பின்னர், அவை மெல்பேர்னுக்கு கொண்டுவரப்பட்டன. அவற்றுடன், 20 சிற்பிகளும் அங்கிருந்து வந்தார்கள். தற்போது கோவிலில் அவற்றை பொருத்தியும், நிலைநிறுத்தியும் தங்கள் பணியை முடித்திருக்கிறார்கள்.

செய்துமுடிக்கப்பட்டுள்ள இந்த புனருத்தாரண வேலைகள், இதன் பின்னணியில் பணியாற்றிய சிற்பிகளின் உழைப்பு, வரலாற்றுடன் ஒன்றிய இதற்கான தூரநோக்கம் என்பவற்றுக்கு எல்லாம் அப்பால் - புலம்பெயர்ந்த நாடொன்றில் இவ்வாறனதொரு பணியை முன்னெடுப்பது என்பது எவ்வளவு சிக்கல்கள் - சவால்கள் - நிறைந்தது என்பது எல்லோருக்கும் தெரியும்.

எமக்கான சில பிரத்தியே தேவைகளை - ஊரில் அனுபவிப்பதுபோல- செய்துமுடிக்க வேண்டும் என்று ஆசைகொண்டாலே, அதனை வெளிநாட்டு மண்ணில் நிறைவேற்றுவது என்பது இன்னமும் கடினமாக சவாலாகவே உள்ளது. உதாரணத்துக்கு, ஒரு மிளகாய்தூள் போத்தலை ஊரிலிருந்து கொண்டுவருவதற்கே ஒரு மனிதன் செத்தல் மிளகாயக மாறி மீள்பிறப்பெடுக்கவேண்டியிருக்கிறது.

ஆனால், அத்தனை சவால்களையும் கடந்து, புனருத்தாரண வேலைகளை செய்து முடித்து, தங்களின் முன்பாக இடர்பட்ட அத்தனை சவால்களை சாதனைகளாக்கியதில் கும்பாபிஷேகத்தை எதிர்நோக்கிநிற்கும் வக்ரதுண்ட விநாயகர் ஆலயத்தினரின் முயற்சி பாராட்டுதற்குரியது. ஒரு புலம்பெயர் சமூகம் இந்த மண்ணில் தன் முன்னால் எதிர்படும் சவால்களை எவ்வாறு வெற்றிகொள்ளலாம் என்பதற்கு இவையெல்லாம் பேருதாரணங்கள்.

ஆனால், மெல்பேர்னில் கோவில்களை அமைத்தவர்களும் அதில் சம்பந்தரப்பட்டவர்களும் விக்டோரிய அரசிடமும் கவுன்ஸில்களிடமும் சவால்களை எதிர்நோக்கியதை விட, தங்களுக்குள் அடிபட்டு - கட்டிப்பிடித்து உருண்டு - ஆளையாள் வேட்டியை உருவிக்கொண்டு ஓடியது வரலாறு. இது உண்மையில், கடவுள்களின் பெயரால் இடம்பெற்ற மிக மோசமான காரியங்கள். சுருக்கமாக சொன்னால், வழிபாட்டு இடங்கள் கடைப்பிடிக்கவேண்டிய புனிதத்தன்மை அதனை அமைப்பதற்கு முன்னின்றவர்கள் பலரது மனங்களில் இருக்கவில்லை. சண்டையிட்டுக்கொண்டு தனிக்கோவில் திறந்ததும் திறந்த கோயிலுக்குள் நெருப்பு வைத்ததும் தலைப்பாகை கிடைக்கவில்லை என்பதற்காக அடுத்தவர்களின் தலையெடுக்க திரிந்ததுமாக பல்வேறு இடங்களில் வெவ்வேறு முகஞ்சுளிக்கும் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

இந்த வரலாற்றினை மிகச்சுருக்கமாக பின்னோக்கிச்சென்று பார்த்தால், எத்தனை பேர் சேவலும் மயிலுமாக பிளந்து நின்றிருக்கிறார்கள் என்பது தெரியவரும்.

இந்த கசப்பான பக்கங்கள் கடந்து வரப்படவேண்டியவைதான். எக்காலத்திலும் மீள இடம்பெறக்கூடாத சம்பவங்கள் தான். ஆனால், அதற்காகவேனும் இந்த வரலாற்றினை ஞாபகப்படுத்தவேண்டியிருக்கிறது. நவீன மெல்பேர்னியர்களும் - ஆஸ்திரேலிய வரலாற்றின் மீது பிரக்ஞை கொண்டவர்களும் இதுபற்றி அறிந்திருக்க வேண்டும். அப்போதுதான், உணர்வுபூர்வமான இந்த விடயங்களை கையாள்பவர்களுக்கு கடந்தகாலம் ஒரு பட்டறிவை கொடுக்கும்.

இது தொடர்பில் இந்தக்கட்டுரை முழுமையான தகவல்களை கொண்டிராவிட்டாலும் சம்பவங்களின் சாராம்ஸங்களை யாவது சுருக்கமாக குறிப்பிடுவதற்கு விளைகிறது.

### கோவில் வரலாற்றின் ஆரம்பம்

மெல்பேர்னில் கோயிலொன்றை அமைக்க வேண்டும் என்ற பக்திபூர்வமான நோக்கம் எண்பதுகளின் ஆரம்பத்தில், இங்கு புலம்பெயர்ந்து வந்தவர்களுக்கு தோன்றியது. அப்போது மெல்பேர்னின் ‘ப்ரஹான் இமிகிரேஷன் சென்ரர்’ மண்பத்தில், மாதத்தின் கடைசி சனிக்கிழமைகளில் பிரார்த்தனைக்கூட்டமாக மாத்திரம் கூடி, வழிபாடுகளை செய்துவந்தவர்கள், சிறிது சிறிதாக இந்த சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுப்பதற்கு தலைப்பட்டார்கள்.

அப்போது, லண்டனிலிருந்து மெல்பேர்னுக்கு புலம்பெயர்ந்து வந்தவர்களிடமிருந்த பொருளாதார பின்புலம், தாங்களாகவே இந்த செலவுகளில் பெரும்பகுதியை பொறுப்பேற்றுக்கொள்வதற்கான ஆற்றலையும் தைரியத்தையும் கொடுத்திருந்தது.

இவர்களிடம் முகிழ்ந்த திட்டத்துக்கு ‘கரம் டௌன்ஸ்’பிரதேசத்தில் அரசிடமிருந்து காணி கிடைத்தது. அங்கு கோயிலை அமைப்பதற்கான பூர்வாங்க பணிகளுக்கு மக்களிடம் போதிய ஆதரவும் அனுசரணையும் ஆசீர்வாதமும் கிடைக்கப்பெற்ற நிலையில், 86 ஆம் ஆண்டு கோவிலுக்கான அடிக்கல் நாட்டு வேலைகள் ஆரம்பமாயின. முதலில், சிறிலங்காவினை பூர்வீகமாகக்கொண்ட பெரும்பான்மையினரால் மேற்கொள்ளப்பட்ட இந்த முயற்சியில், பின்னர் தமிழக மற்றும் மலேசிய மக்களின் அறிவும் ஆற்றலும் ஆதரவும் உள்ளீர்க்கப்பட்டது. அப்போதுதான், அந்தக்கோயிலில் சிவபெருமானோடு விஷ்ணுவையும் சேர்த்து நிர்மாணிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. இந்தக்கோயில் கட்டத்தொடங்கிய காலப்பகுதியில், காஷ்மீரை தவிர, சிவனும் விஷ்ணும் சேர்ந்து எழுந்தருளியிருந்த கோயில்கள் உலகில் வேறெங்கும் இருந்திருக்கவில்லை என்று கூறப்பட்டது. இன்னொரு வகையில், பார்க்கப்போனால் இது மிகவும் தூர நோக்கமுள்ள அருமையான திட்டமும்தான் என்பது இப்போது புரிகிறது.

ஆனால், கோவில் கட்டி கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு முன்னரே, கோயில் பொறுப்பாளர்களுக்குள் பிரச்சினை தொடங்கியது. (அப்போதுதான், சிறிலங்காவில் இந்தியன் ஆர்மி பிரச்சினையும் தொடங்கியிருந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது) இந்தப்பிரச்சினைக்கு பல்வேறு காரணங்கள் கூறப்பட்டாலும், அதிலிருந்து ஒரு பிரிவினர் கிளம்பிவந்து இன்னொரு கோவில் அமைப்பதாக முடிவெடுத்தனர் என்பது தான் சாராம்ஸம். சிவா - விஷ்ணு கோவிலை கட்டுவதற்கான பணிகள் காலதாமதமாகிக் கொண்டிருந்தன என்றொரு தரப்பின் குற்றச்சாட்டும், குறிப்பிட்ட சிலருக்கு கோவில் நிர்வாகத்தில் குறிப்பிட்ட பதவிகள் கொடுக்கப்படவில்லை என்பதால் ஏற்பட்ட பிளவு என்ற இன்னொரு தரப்பின் குற்றச்சாட்டுமாக, கடந்த முப்பது வருடங்களுக்கமேலாக மெல்பேர்னியர்களின் காதுகள் இந்தப்பிளவு தொடர்பாக பல புதினங்களை கேட்டிருக்கின்றன.

இவ்வாறு சிவா - விஷ்ணு ஆலயத்திலிருந்து ஒருபிரிவினர் தனியாக கிளம்பியதால், ஏற்கனவே அந்தக்கோவிலை கட்டுவதற்கு நிதியளிப்பதாக உறுதியளித்தவர்கள் பலரும் கூட, இவ்வாறு கிளம்பிவந்தவர்களுடன் கூடவே வந்துவிட்டார்கள். மெல்பேர்னில் தளைத்தோங்கவிருந்த சைவத்தில் ஒருபக்கம் பொலிவும் இன்னொரு பக்கமும் நலிவும் ஏற்படுவதற்கு இது காரணமாக அமைந்தது என்று அன்று இந்தப்பிரச்சினைகளில் பார்வையாளர்களாக இருந்தவர்கள் கூறுகிறார்கள்.

ஆகவே, நிதி வழங்கக்கூடிய பக்தர்கள் ஏற்கனவே தயாராக இருந்த காரணத்தினால், பிரிந்துவந்தவர்கள் புதிய கோவில் வேலைகளை உடனடியாக ஆரம்பிப்பதில் சிக்கல் இருக்கவில்லை.

ஆக, சிவபெருமானைவிட்டு கிளம்பி வந்தவர்கள், மகன் பிள்ளையாருக்கு கோவில் நிர்மாணிப்பதற்கு எடுத்த முடிவின் விளைவாக உருவானதுதான் சிறி வக்ரதுண்ட விநாயகர் ஆலயம்.

1989 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் விநாயகருக்கு கோயில் நிர்மாணிப்பதற்கு திட்டமிட்டு, அப்போது இந்தியாவுக்கு பயணித்தவர்களிடம் தமிழகத்திலிருந்து விநாயகர் திருவுருவத்தை பெற்றுக்கொள்வதற்கு கோரப்பட்டது. தமிழகத்தில் ஆசீர்வதிக்கப்பட்ட பஞ்சலோக விநாயகர் இரண்டு மாதங்களில் மெல்பேர்னுக்கு வந்து சேர்ந்தார். மெல்பேர்னுக்கு முதன்முதலாக புலம்பெயர்ந்து வந்த விநாயகர் டெம்பிள்ஸ்டௌவில் உள்ள ஒரு வீட்டில் வைக்கப்பட்டார். அங்குஅவருக்கு கிரமமாக பூஜைகள் நடைபெற்றன.

1990 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இந்த விநாயருக்கு மெல்பேர்ன் கம்பர்வெல் பாடசாலை மண்டபத்தில்,முதன் முதலாக சங்காபிஷேயம்நடைபெற்றது. மெல்பேர்ன் முழுவதிலுமிருந்த பக்தர்களுக்கு அது பக்திமயமான நிகழ்வாக அமைந்தது. மெல்பேர்னில் எழுந்தருளியுள்ள முதல் பிள்ளையரை பார்ப்பதற்கும் அருள்பெறுவதற்கும் சுமார் எழுநூறு பேரளவில் கலந்துகொண்டார்கள். அங்கு, மெல்பேர்னில் பிள்ளையார் கோவில் கட்டுவதற்கு பக்தர்களிடம் உதவியும் கோரப்பட்டது. ஆயுள் சந்தாவாக ஐயாயிரம் டொலர்கள் அறிவிக்கப்பட்டது. அருள்பெற வந்த எவரும் பொருள்கொடுக்க பின்நிற்கவில்லை. கடவுளிடம் யாரும் கடனாளியாகிவிடக்கூடாது என்பது கடவுளை உருவாக்கிய காலம்தொட்டு கடைப்பிடிக்கப்பட்டுவரும் அடியார்களின் பக்திமுறை.

ஆக, அந்த ஆண்டு மார்ச் மாதம் “மெல்பேர்ன் விநாயகர் இந்து சங்கம்” உத்தியோகபூர்வமாக பதிவுசெய்யப்பட்டது.

(14ஆம் பக்கம் பார்க்க)



எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI





# 'கோவிட்' முடியும்வரை காத்திருக்கும் கோவில் கும்பாபிஷேகமும் பிள்ளையாரும்

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தொடர்ந்து, டெம்பிள்ஸ் டௌவில் எழுந்தருளியிருந்த விநாயகரின் புகழ் மெல்பேர்ன் முழுவதும் பரவியது. அறிமுகமாகிவிட்ட ஆனைமுகனைத்தேடி எங்கிருந்தோ எல்லாம் பக்தர்கள் வரிசை கட்டிவந்து வழிபடத் தொடங்கினார்கள். தூரஇடங்களிலிருந்து பூக்களை கொண்டு வந்து வழிபடுவதெல்லாம் அப்போது மெய் வருந்தும் பணியாக இருந்தாலும், அதனை அடியார்கள் தெய்வப்பணியாக வாஞ்சையோடு செய்தார்கள்.

மறுபுறத்தில், கோவில்கட்டுவதற்கான வேகத்தில் உச்சவேகத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தன. பொதுமக்கள் குறுகிய காலத்ணதிலேயே மூன்று லட்சம் டொலர்களை தருவதாக உறுதியளித்திருந்தார்கள். இதைவிட, சிலர் வங்கியில் கடனெடுத்தும் கொடுத்தார்கள்.

*1990* ஆம் ஆண்டு ஏப்ரல் *20* ஆம் திகதி, தற்போது கோயில் அமைந்துள்ள இடத்தில் - பேஸினில் - கோவிலுக்குரிய நிலம் வாங்கப்பட்டது. அதன்பின்னர், "நொக்ஸ்" கவுன்ஸிலிடம் உரிய அனுமதிகள் பெறப்பட்டு, கோவிலை கட்டுவதற்கான விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டன.

*1991* ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கோவிலுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. அதாவது, சிவா விஷ்ணு கோவிலில் இருந்து பிரிந்துவந்து - கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்குள் - இன்னொரு கோவிலை கட்டுவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டுவிட்டது. (வரலாற்றின்காலத்துளியோடு சற்று ஒப்பிட்டுப்பார்த்தால், ராஜீவ் காந்தி படுகொலைசெய்யப்பட்டது இந்த ஆண்டு மே மாதமாகும்)

*1992* ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம், மகாபலிபுரத்திலிருந்து வந்த சிற்பிகள் கோயில் நிர்மாண வேலைகளை ஆகம விதிப்படி ஆரம்பித்தார்கள். அந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் பணிகள் நிறைவடைந்து, கோயிலின்முதலாவது கும்பாபிஷேகம் *41* நாட்கள் பக்திபூர்வமாக நடைபெற்றது.

அதாவது, முதலில் தொடங்கிய சிவா - விஷ்ணு ஆலயத்தின் முதலாவது கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு முன்னரே, வக்ரதுண்ட விநாயகர் ஆலய கும்பாபிஷேகம் நடைபெற்றுவிட்டது. அதன் பிறகு, கோயில் பிரகாரத்தை விரிவுபடுத்தும்பொருட்டு பெரும் அதிஷ்ட லாபச் சீட்டிழுப்பு, மரக்கறி உணவுத்திருவிழாக்கள் என்று பல நிதிசேகரிப்பு நடத்தப்பட்டன. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக பிள்ளையார் பிரபலமாகிக் கொண்டே போனார். வேறு தேவைகள் என்றவுடன் கிள்ளிக்கொடுக்கும் மக்கள், பிள்ளையாரின் பெயரை கேட்டவுடன் அள்ளிக்கொடுத்தனர்.

கிடைக்கப்பெற்ற பணத்தோடு *1995*இல், கோயிலுக்கு அருகிலிருந்த வீடு ஒன்று வாங்கப்பட்டது. *1997* இல் கோவிலுக்குரிய சமையல் பகுதி கட்டப்பட்டது. கோவிலுக்குரிய ஆதரவு பெருகிய அதே விகிதத்தில் பக்தர்களும் தொடர்ந்து பெருகியபடியிருந்தார்கள்.

*2004* ஆம் ஆண்டு பஞ்சமுக விநாயகர் கோவிலுக்கு கொண்டுவரப்பட்டார். கோவிலுக்கு கொடிக்கம்பம் நிர்மாணிக்கப்பட்டது. அத்துடன், கோவிலுக்குள் பிள்ளையாரின் சகோதரர் குடும்பமும் தகப்பனும்கூட குடிவந்தார்கள். நாகதம்பிரான், ஹனுமான் ஆகியோரும் வந்தார்கள். வசந்த மண்டபமும் உருவானது.

*2007* ஆம் ஆண்டு புனருத்தாரண கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. அருள்பாலிக்கும்ஆனைமுகத்தான்சந்நிதானம் பேரருளோடும் பெரும்பொருளோடும் எழுந்து நிமிர்ந்து நின்றது. ஆயிரக்கணக்கானபக்தர்கள்மெல்பேர்ன்முழுவதிலுமிருந்து திரண்டு வந்து "அரோஹரா" என்று எழுப்பிய சத்தம் பேஸின் வானத்தை கிழித்தது.



அதன்பிறகு, *2008* ஏப்ரல் *18* ஆம் திகதி கோவிலில் முதன்முதலாக மஹோற்சவம் இடம்பெற்றது. அப்போதுதான், கோவிலில் முதன்முதலாக தேர் திருவிழா நடைபெற்றது. கவுன்ஸிலிடம் விண்ணப்பித்து, வீதியில் தேர் பவனி வருவதற்கு அனுமதி பெறப்பட்டது. இங்கு குறிப்பிடப்பட வேண்டிய மிக முக்கிய வரலாற்று குறிப்பு, இன்றுவரைக்கும் ஆஸ்திரேலியாவிலேயே வீதியில் உலாவருவதற்கு கவுன்ஸிலால் அனுமதியளிக்கப்பட்ட ஒரேயொரு கடவுள் பிள்ளையார் மாத்திரம்தான் என்று பெருமையோடு கூறுகிறார்கள் கோவில் நிர்வாகத்தினர்.

(வரலாற்றின் காலத்துளியை சற்று உள்ளங்கையில் தொட்டுப்பார்த்தால் புரியும், இந்த மகோற்சவ காலப்பகுதியில்தான், சிறிலங்காவின் மேற்கு பகுதியில் மிகக் கொடூரமான போர் இடம்பெற்றுக் கொண்டிருந்தது. மடு தேவாலயம் சிறிலங்கா படையினரால் கைப்பற்றப்பட்டது)

*2012* ஆம் ஆண்டு புதிதாக கட்டப்பட்ட மெல்பேர்ன்விநாயகர்கலாச்சாரமண்டபம் பொதுமக்களின் பேராதரவுடன் திறக்கப்பட்டது. சிறிலங்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட புதிய தேர் *2013* ஆண்டு இடம்பெற்ற திருவிழாவில் வீதிபவனி வந்தது.

இவ்வாறு கடந்த *1989* ஆம் ஆண்டு முகிழ்ந்த திட்டம் இன்றுவரைக்கும் பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் ஆதரவினால் வக்ரதுண்ட விநாயகர் ஆலயத்தை பக்திபூர்வமாக - மெல்பேர்ன் இந்துக்களின் கலாசார அடையாளங்களில் ஒன்றாக - பேணிவருகிறது கோவில் நிர்வாகம். இந்த பக்தியும் அதற்கான தேவையும் தலைமுறைகளின் வழியாக கடத்தப்படுகிறது.

இந்தக்கோவிலின் வளர்ச்சிக்கு நிதிப் பங்களிப்பு வழங்கிய பல நிகழ்ச்சிகள் இளையவர்களால் நடத்தப்பட்டவை ஆகும். அவர்களின் உழைப்பு இந்தக் கோவிலின்முன்னேற்றத்தில்பெருமளவில் உள்ளது என்பது முக்கியமானது. இவை அனைத்தையும் தாண்டி, இந்தப்பத்தியில் முன்னர் குறிப்பிட்டதுபோல -

இந்தக்கோவிலின் வளர்ச்சியென்பது எவ்வளவுக்கு எவ்வளவு புனிதமானதோ அவ்வளவுக்கு அவ்வளவு சிலகறைகளும் வரலாற்றின் அடியில் கிடக்கத்தான் செய்கின்றன. அவற்றையும் கழுவிக்கொண்டுதான் காலம் முன்னேறிக்கொண்டிருக்கிறது.

இந்தக்கோவிலின் பயணத்தில், *1994* இலும் *2004* இலும் இந்தக்கோவிலின் நிர்வாகிகளுடன் அங்கு முன்னர் பொறுப்பிலிருந்தவர்கள் போட்ட அதிகார சண்டையினால், அந்தப்பிரச்சினை நீதிமன்றம் வரை சென்றது. இந்த வழக்குகள் ஆஸ்திரேலிய நீதித்துறையின் தலைமுடிகளை பிய்த்தெறிந்திருக்கின்றன. கோவில் நிர்வாகம் இதற்காக சுமார் *125* ஆயிரம் டொலர்களை செலவிடவேண்டியிருந்தது. ஆனால், அந்தப்பணம் தனிநபர் ஒருவரினால் அன்பளிப்பாக கோவிலுக்கு வழங்கப்பட்டதன் மூலம், கோவிலின் நிதியும் மதிப்பும் காப்பாற்றப்பட்டது.

அதேபோல, கோவிலில் பணிபுரிந்து ஒருவரினால் ஒரு தடவை கோவில் தீ வைக்கப்பட்டது. அது பொலீஸ் விவகாரமானது. விசாரணைகள் நடந்துமுடிந்து, கோவிலோடு ஒன்றித்து நின்றவர்களுக்கும் ஆஸ்திரேலிய சமூகத்தவர்களின் மத்தியிலும் முகச்சுளிப்பை உண்டுபண்ணியது.

இப்பேற்பட்ட சம்பவங்களையும் அடக்கியதுதான் மெல்பேர்ன் தமிழர்களின் வரலாறு. மெல்பேர்ன் கோவில்களின் வரலாறு. இவை அனைத்தையும் தாண்டி வந்திருக்கின்ற சிறி வக்ரதுண்ட விநாயகர் ஆலயத்தில் தற்போது நடைபெறப் போவது நான்காவது கும்பாபிஷேகமகும்.

முதலில், இரண்டரை மில்லியன் டொலர் செலவில் மூலஸ்தானத்தை மாத்திரம் கருங்கல்லில் அமைப்பதற்கு கோவில் நிர்வாகம் முடிவெடுத்தபோதும், *2019* ஆம் ஆண்டு சில மாதங்களிலேயே ஏகப்பட்ட பணம்பக்தர்களிடமிருந்து வந்து குவிந்துவிட்ட காரணத்தினால், நான்கு மில்லியன் டொலர் செலவில் *11* சந்நிதானங்களை அமைப்பதற்கு முடிவெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுபற்றி கோவில் நிர்வாகத்திடம் "எதிரொலி" சில கேள்விகளை முன்வைத்தது.

(15ஆம் பக்கம் பார்க்க)

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI





## “கோவிலுக்கான பணமாக பக்தர்கள் தருவதை அர்த்தமற்ற உதவியாக நிராகரிக்கமுடியாது”

# புனருத்தாரணம் தொடர்பில் கோவில் நிர்வாகம் விளக்கம்

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிறி வக்ரதுண்ட விநாயகர் ஆலய நிர்வாகக்குழு தலைவர் தனபாலசிங்கம் கந்தையா மற்றும் செயலர் சண்முகரட்ணம் பிள்ளைஆகியோரையும்தொடர்புகொண்டு கோவில் புனருத்தாரணம் குறித்தும் அதையொட்டிய வேறு சில கேள்விகளையும் கேட்டிருந்தோம்.

**கேள்வி : கோவில் புனருத்தாரணம் முடிவடைந்தும், கும்பாபிஷேகம் செய்வதற்கு 'கோவிட்'சிக்கல் முடிவடையும்வரை காத்திருப்பதாக அறிந்தோம். இதுபற்றிய பிந்திய தகவலை சொல்ல முடியுமா?**

பதில் - நிச்சயமாக,நீங்கள் கூறியது போல புனருத்தாரண வேலைகளில் பெரும் பகுதி முடிவடைந்துவிட்டன.

இந்தியாவிலிருந்து வந்த சிற்பிகளில் ஒரு தொகுதியினர் கடந்த ஒகஸ்ட் மாதம் திரும்பிவிட்டார்கள். இன்னொரு தொகுதியினர்விரைவில்திரும்பவுள்ளார்கள். கோயில் கருங்கல் வேலைப்பாடுகள் மற்றும் உட்பிரகாரத்திலுள்ள சிற்ப வேலைப்பாடுகள் அனைத்தும் நிறைவுபெற்றுவிட்டன.

ஆஸ்திரேலியாவின் உள்ளூர் வேலையாட்கள் மூலம் செய்யவேண்டிய பணிகள்தான் எஞ்சியிருக்கின்றன. அந்தவேலைகள் தற்போது நடைபெற்றுவருகின்றன. கோயில் தரையும் உட்கூரை வேலைகளும் மீதமுள்ளன. மின்சார இணைப்பு வேலைகள் மற்றும் குளிரூட்டிகளைப்பொருத்தும் பணிகள் ஆகியவை தற்போது நடைபெற்று வருகின்றன.

**கேள்வி: மிகப்பெரியதொரு செலவில் இவ்வானதொரு கருங்கல் ஆலய புனருத்தாரணத்துக்கான தேவை எவ்வாறு முளைத்தது? முதலில் நீங்கள், மூலஸ்தானத்தை மாத்திரம் கருங்கல்லினால் அமைப்பது என்று முடிவெடுத்துவிட்டு பின்னர், பணம் வந்துவிட்டது என்பதற்காக வேறு சந்நிதாணங்களிலும் அதனை செலவிட்டதாக அறியக்கிடைத்த தகவல் உண்மையா?**

பதில் - இதில் தெளிவான விளக்கமொன்றை கூறவிரும்புகிறோம். மூலஸ்தானத்தை கருங்கல்லினால் அமைப்பதுதான் எங்களது திட்டமாக முதலில் இருந்தது. இந்த திட்டத்துக்கான நிதியை அடியார்களிடம் கேட்க திட்டமிட்டிருந்தோம். அந்த அரை மில்லியன் டொலர் நிதி கிட்டத்தட்ட ஒன்று ஒன்றரை வருடங்களில் கிடைக்கப்பெறும் என்று நாங்கள் எதிர்பார்த்தோம்.

ஆனால், புனருத்தாரண அறிவிப்பைக் கேட்ட மாத்திரத்தில், ஆறு மாதங்களிலேயே ஒரு மில்லியன் டொலர்களை அடியார்கள் உவந்தளிப்பதாக உறுதியளித்தார்கள். ஒரு வருடத்தில் இரண்டு மில்லியன் டொலர்கள் தருவதாக உறுதியளித்திருந்தார்கள்.

இதன் அடிப்படையில், கோவிலின் ஏனைய சந்நிதானங்களையும் கருங்கல்லினால் அமைப்பதற்கு நிர்வாகக்குழு ஆலோசித்து, அதனை முடிவாக எடுத்துக்கொண்டோம்.

கருங்கல்லினால் நிர்மாணிக்கப்படும் கோவிலின் ஆயுள் நீண்டது. இந்தியாவிலும்சிறிலங்காவிலுமுள்ளகோவில்கள்ஆயிரக்கணக்கான வருடங்கள் நீடித்து நிலைப்பதற்கு காரணம், அவை கருங்கல்லினால் மேற்கொள்ளப்படுவதே ஆகும். சீமெந்தினால் அமைக்கின்றபோது, ஒவ்வொரு 12 வருடங்களுக்கு ஒருதடவை, அவற்றில் சேதங்கள் - உடைவுகள் - சிதைவுகள் ஏற்படுகின்றன. அவற்றை மீள நிர்மாணிப்பதற்கென்று அவ்வப்போது தொடர் செலவுகள் இருந்துகொண்டேயிருக்கும்.

ஆகவேதான், கோவிலுக்கென அடியார்கள் நிதியை உவந்தளிக்கும்போது, கோவிலின் பெரும்பகுதியை கருங்கல்லினால் அமைத்துக்கொண்டால், அது எதிர்கால செலவுகளை அறவே இல்லாமல் செய்துவிடும் என்ற நோக்கத்துடன், இந்த திட்டத்தினை முன்னெடுத்தோம்.

**கேள்வி: கோவிலுக்கு பணம் என்று கேட்டால், யாரும் எப்போதும் தருவதற்கு தயாராக இருப்பார்கள். இது இங்கு மாத்திரமல்ல, எங்கும் நடைபெறுகின்ற ஒரு விடயம் அப்படியிருக்கும்போது,இவ்வளவு பெரியதொரு நிதியை தற்போது செலவு செய்துவிட்டு, எதிர்காலத்திலும் நீங்கள் அடியார்களிடம் பணம் கோரும் திட்டமுள்ளதா? கோவிலை இதற்கு அப்பாலும் விரிவாக்கம் செய்யும் நோக்கமுள்ளதா? அல்லது, கோவிலுக்கென்று அடியார்கள் தருகின்ற நிதியை வேறு உருப்படியான வழிகளிலும் பயன்படுத்தும் திட்டம் ஏதாவது உள்ளதா?**

பதில்: இது கொஞ்சம் செறிவான கேள்வி. ஒரு பகுதி மக்களை பொறுத்தவரையில், கோவிலுக்கு செலவு செய்வதை அவர்கள் உருப்படியான காரியமாகவே பார்க்கிறார்கள். அதனை வீண் செலவாக அவர்கள் எண்ணவில்லை.

நீங்கள் கோவிலுக்கு வந்து பார்த்திருந்தீர்கள் என்றால் தெரிந்திருக்கும், சிவா - விஷ்ணு கோவில்போல சிறி வக்ரதுண்ட விநாயகர் ஆலயம் பெரிய நிலப்பரப்பில் அமைந்த ஆலயம் அல்ல. கோவிலுக்கு வருகின்ற அடியார்களுக்கு வாகன தரிப்பிடம் என்பது எப்போதும் சவாலான ஒரு விடயமாக இருந்துவருகிறது.

ஆகவே, கோவில் அடியார்களுக்கான வாகனத்தரிப்பிடத்தை உருவாக்கிக்கொடுப்பதற்கு உரிய காணியை வாங்குவதற்கு நாங்கள் தொடர்ச்சியாக முயற்சிசெய்து வருகிறோம். அது கோவிலுக்கு எப்போதும் அத்தியாவசிய தேவையாக இருந்து கொண்டிருக்கிறது.

மற்றும்படி, தற்போது இடம்பெற்றது போல பெரும் பணச்செலவில் புனருத்தாரணவேலைகள்எதிர்காலத்தில்நடைபெறுமா என்று கேட்டால், அநேகமாக இல்லை என்றுதான் இப்போது கூறுவேன். ஏனெனில், கோவில் தற்போது கருங்கல்லினால் நிர்மாணிக்கப்பட்டுவிட்டது. இதன்மீதான எதிர்காலச்செலவுகள் கணிசமானளவு குறைக்கப்பட்டுவிட்டன.

ஆனால், எதிர்கால சந்தத்தியின் சார்பில் நான் பேசமுடியாது. கோவிலிற்குள் என்று இல்லாவிட்டாலும், கோவில் சமையலிடம், அதை அண்டிய இடங்களுக்கான திருத்தவேலைகள், விஸ்தரிக்கும் பணிகள் ஆகியவற்றுக்கு நிதி தேவைப்படலாம். அந்தவேலைகள் குறித்து குறிப்பிடப்பட்டு, அடியார்களிடம் உதவி கேட்கப்படலாம். ஆனால், இப்போது அந்த திட்டம் எதுவும் இல்லை.

**கேள்வி: தற்போது கோவிலில் ஊதியத்துக்கு பணிபுரிபவர்கள் எத்தனை பேர் என்று கூறமுடியுமா?**

பதில்: ஒன்பது பேர் தொடர்ச்சியாக ஊதியத்துக்கு பணிபுரிந்துவருகிறார்கள். மூன்று ஐயர்கள். இரண்டு வாத்தியக்கலைஞர்கள். சமையல் பணியில் ஈடுபவர்கள் இருவர். புனருத்தாரண வேலைகளில் சேர்ந்து பணியாற்றுபவர்கள் இருவர்.

**கேள்வி: கோவில் என்பது வழிபாட்டு இடமெனக்கொள்ளப்பட்டாலும், ஒரு புலம்பெயர் தேசத்தில், இப்படியான மக்கள் கூடுமிடத்துக்கென்று சமூகப்பொறுப்பொன்று உள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள். தனியாக அவரவர் சமூகத்தோடு மாத்திரம் கூடி கலைவது, பல்தேசிய சமூகமொன்றில் ஆரோக்கியமான விடயமாக இருக்காது. அவ்வாறு இருக்கவும் கூடாது.**

**வக்ரதுண்ட விநாயகர் ஆலயம் இந்த நாட்டின் கலாச்சார அடையாளங்களில் ஒன்று. இங்குபெருந்தொகையானமக்கள் கூடுகிறார்கள். பெருந்தொகையான பணமும் அடியார்களிடமிருந்து கிடைக்கப்பெறுகிறது.**

**இந்த வளங்களின் அடிப்படையில், ஆஸ்திரேலிய சமூகத்துக்கு இந்தக்கோவில் வழங்கியிருப்பது என்ன என்று கேட்டால் என்ன சொல்வீர்கள்?**

பதில்: இது தொடர்பாக விளக்கமளிப்பதில் நாங்கள் பெருமையடைகிறோம்.

இந்தக் கோவிலுக்கான காணியை நாங்கள் வாங்கிய காலப்பகுதியில், கோவிலுக்கு முன்பாக “சல்வேஷன் ஆர்மி” அமைப்பு நிலைகொண்டிருந்தது. எமது கோவிலோடு முன்பு நெருங்கி செயற்பட்ட டொக்டர் ஷண், டொக்டர் பாலசுப்ரமணியம் போன்றவர்கள் தலைமையில்,சல்வேஷன் ஆர்மியின் வருடாந்த “ரெட் ஷீல்ட்” நிதிக்கு நாங்கள் தொடர்ச்சியாக பங்களித்து வந்திருக்கிறோம்.

சல்வேஷன் ஆர்மிக்கு வருடா வருடம் “ரெட் ஷீல்ட்” சேகரிப்பின் மூலம் கிடைக்கப்பெறும் நிதியில், கிழக்கு மெல்பேர்ன் பகுதியில் நாங்கள் சேகரித்துக் கொடுக்கும்நிதிதான்அதிகமாகஇருந்திருக்கிறது.

அதுபோல, சுனாமி காலப்பகுதியிலும் இதேபோன்ற பேருதவிகளை நாங்கள் கோவிலின் சார்பாக நல்கியிருக்கிறோம்.

மிக அண்மையில், 2020 காட்டுத்தீயின் போது,அந்தஅனர்த்தத்தினால்பாதிக்கப்பட்டவர்களுக்கு எமது கோவிலின் இளையோர் அமைப்பு பத்தாயிரம் டொலர்களை சல்வேஷன் ஆர்மியின் ஊடாக வழங்கியது.

அதுபோல, தற்போது கொரோனா காலப்பகுதியில் பாதிக்கப்பட்டவர்களுக்காக “வீ கெயர்” அமைப்புடன் இணைந்து எமது கோவில்செயற்பட்டிருக்கிறது. இந்தப் பேரிடர் காலப்பகுதியில் தொழில் இழந்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியளிப்பதற்கு பத்தாயிரம் டொலர்களை நாங்கள் சேகரித்தோம்.

அவற்றில், 400 உலருணவுப்பொதிகள், 1320 பால் பெட்டிகள், 500 முகக்கவசங்கள் ஆகியவற்றை “வீ கெயர்”தலைவரிடம் கொண்டுபோய் கொடுத்திருந்தோம். பொருட்கள் வாங்கியதுபோக மிகுதிப்பணத்தை வீ கெயரிடமே ஒப்படைத்தோம். கோவில் தொண்டர்கள் “வீ கெயர்”அமைப்பிடம் சென்று,அவர்களுடன் இணைந்து பொதி செய்யும் வேலைகளையும் செய்து வந்திருந்தோம். இந்தப்பேரிடர் காலப்பகுதியில் நாங்கள் மேற்கொண்ட பணிகுறித்து பெருமையடைகிறோம்.

**கேள்வி: அப்படியானால், இப்படியான பேரிடர் காலங்களில் கோவிலின் பெயரால் பிரத்தியே நிதிசேகரிப்பினை மேற்கொண்டு உதவியளித்துவருகிறீர்களே தவிர, கோவிலுக்கு பக்தர்கள் மற்றும் நலன்விரும்பிகள் உவந்தளிக்கின்ற நிதியிலிருந்து எதையும் செலவு செய்யவில்லை.**

பதில்: இல்லை.

எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI

செப்ரெம்பர் 2020




# குமிழ்: காலமான காயத்தில் வடியும் குருதி

கடக்க முடியாத முள்வழியாக நம்முடைய துயர்க் காலம் (கொடுங்காலம்) நீண்டுகிடக்கிறதுஎன்பதை மேலும் நிரூபித்திருக்கிறது, ரவி(சுவிஸ்) எழுதியிருக்கும் "குமிழி"யும்.

"குமிழி"விடுதலைஇயக்கமொன்றின் உட்சிதைவைச் சொல்லும் பிரதி. தொடர்ந்து வருகின்ற இந்த மாதிரிப் பிரதிகள் ஒரு வகையில் மனஅமைதியை இழக்கச் செய்கின்றன. அந்தளவுக்கு இருளும் துயரும் அவமானங்களும் கொடுமைகளும் அநாகரீகங்களும் கசடும் கசப்புகளும் அலங்கோலங்களும் கீழ்மைகளும் நிறைந்தது நம்முடைய கடந்த காலம். இதன்போது சிந்தப்பட்ட குருதியும் பெருகிய கண்ணீரும் இன்னும் நம்முடைய நினைவுப் பரப்பிலிருந்து காயவில்லை. அப்போது எழுந்த ஓலக்குரல்களின் ஒலி இன்னும் அடங்கவில்லை. அன்று சிதைந்த மனங்கள் இன்னும் சீராகியதில்லை. பலியிடப்பட்ட போராளிகள் இன்னும் திரும்பத்திரும்ப மனதில் வந்து கொண்டேயிருக்கிறார்கள்.

மாபெரும் கனவுகளோடு தொடங்கப்பட்ட விடுதலைப்போராட்டம் நம் கண் முன்னே சிதைந்தது. சிதைந்தது என்று இதைச் சொல்வதை விடச் சிதைக்கப்பட்டது என்று சொல்வதே சரியானதாக இருக்கும். இந்தச் சிதைவு புறவழியில் - வெளியாரினால்நடந்ததுஎன்பதையும்விட- அகவழியில் நடந்தது என்பதே உண்மை. பிற சக்திகளும் அதைச் சிதைப்பதில் பங்காற்றியிருக்கின்றன என்றாலும், நம்முள்ளிருந்த அகச்சிக்கல்களும்அரசியல்போதாமைகளும் அதிகார வெறியுமே அதைச் சிதைத்தன. அல்லது இந்தச் சிதைவிற்குப் பெரும் பங்காற்றின.

இதனால் "கனவு" இயக்கங்கள் மட்டுமல்ல,இந்தப்போராட்டத்தில்அர்ப்பணிப்புணர்வோடு இணைந்துகொண்ட இளைய தலைமுறையினரும் காயடிக்கப்பட்டு - சீரழிக்கப்பட்ட - சிதைந்த வரலாறு அது. இதை எளிதில் கடந்து செல்லமுடியாது. இதன் ஒரு பகுதியையே ரவி எழுதியிருக்கிறார், எழுதிக் கடக்க முற்பட்டிருக்கிறார். அல்லது தன்னுள் தீராத வலியை உண்டாக்கிக் கொண்டிருந்த சுமையை இறக்கி வைக்க முற்பட்டிருக்கிறார்.

அதேவேளை, இதை வாசிக்கும் நாமோ இந்தச்சுமையைஏற்றிக்கொள்ளவேண்டியிருக்கிறது. இதனால் நமக்குள் அமைதியின்மை ஏற்படுகிறது. இந்தக் கசப்பிலிருந்து, இந்த துயர் நினைவுகளிலிருந்து விலகிச் செல்லத்துடிக்கின்ற நம்மை மீள இழுத்து இது அலைக்கழிக்கிறது. ஆனாலும் இதை நாம் ஏற்றுத்தானாக வேண்டும். அதுதான் வரலாற்று நிபந்தனை. எப்படி இந்தப்பிரதியும்இதன்ஆசிரியரும்தம்மைச் சுயவிமர்சனத்துக்குள்ளாக்குகின்றமை முக்கியமாகஉள்ளதோ அந்தளவுக்குநாமும் நம்மைவிமர்சனத்துக்குள்ளாக்கவேண்டும் என்பதே அந்த நிபந்தனை.

இந்தப் பிரதியை ஈழப்போராட்டத்தில் ஈடுபட்டோர், அதனோடு சம்மந்தப்பட்டோர் வாசிப்பதற்கும் இதற்கு வெளியே இருந்தோரும் இருப்போரும் வாசிப்பதற்குமிடையில் வேறுபாடுகள் இருக்கும் என்று நம்புகிறேன். உள்ளே இருந்தோருடைய உளநிலையே நான் முன்னர் குறிப்பிட்டிருப்பது. வெளியே இருந்தோரும் இருப்போரும் இதை வாசிப்புச் சுவாரசியம், அறிதலார்வத்தோடு வாசித்து இன்புறக்கூடும். குறிப்பாக,இன்றைய இளைய தலைமுறையினருக்கு அவசியமான ஒன்றும்கூட.

விடுதலைப் போராட்டத்துக்கும் இயக்கங்களுக்கும் அதில் இணைந்திருந்த போராளிகளுக்கும் என்ன நடந்தது என்பதைப் புரிந்து கொள்வதற்கு இது ஒரு சிறந்த வாசல். எனவே இந்தப் பிரதிக்கு முக்கியமாக இரண்டு வகையான அணுகல்கள், அனுபவங்கள் நிகழலாம். இதை மனதிற்கொண்டே "குமிழி"யின் மீதான பார்வையை நாம்முன்வைக்கவேண்டும். அதுவேநியாயமானது.

"குமிழி" புளொட் என்றழைக்கப்படும் தமிழீழ மக்கள்விடுதலைக்கழகத்தின் மீதான விமர்சனத்தை முன்னிறுத்துகிறது. புளொட் மீதான இந்த விமர்சனம் கோவிந்தனின் "புதியதோர் உலக"த்திலிருந்து தொடர்கிறது. புதியதோர் உலகம் வெளியானது 1985 இல். அப்படியென்றால் முப்பத்தைந்து ஆண்டுகளாக இந்த விமர்சனம் தொடர்கிறது எனலாம். இது மேலும் தொடரும். அந்த நினைவுகளின் உத்தரிப்பு உள்ளவரை இதற்கு முடிவேயில்லை.

கோவிந்தனும்ரவியும்புளொட்டின்உறுப்பினர்களாக இருந்தவர்கள் என்ற வகையில் அந்த அமைப்பின் உள்முரண்பாடுகளின் நேரடிச் சாட்சியங்களாக உள்ளனர். கோவிந்தனையும் (நோபேட்) ரவியையும் விட சீலன் உட்பட வேறு சிலரும் புளொட்டின் உட்சிதைவுகளைப் பற்றி எழுதியிருக்கின்றனர். இன்னும் எழுதியும் வருகின்றனர். எனவே,ஆயுதம் தாங்கிய விடுதலை இயக்கத்திற்குள்ளிருந்த உள் (கட்சி) முரண்பாடுகளையும் சுயவிமர்சனத்தையும் முன்வைத்த பிரதிகள் வாயிலான பாரம்பரியத்தின் தொடக்கம் புளொட்டுக்குள்ளிருந்தே - புளொட்டிலிருந்தவர்களிடமிருந்தே - நிகழ்ந்திருக்கிறது என்றே சொல்ல வேண்டும். அந்தளவுக்கு வேறு இயக்கத்தினரிடமிருந்து இத்தகைய (சுய) விமர்சனங்களும் நேர்மையான சாட்சியங்களும் வரவில்லை.

புலிகள் இயக்கத்திலிருந்தவர்களில் ஷோபாசக்தி, யோ. கர்ணன், தமிழ்க்கவி போன்றவர்கள் புலிகளையும் அவர்களுடையநடவடிக்கைகளையும்ஓரளவுக்குபுனைவின் மூலம் விமர்சனத்துக்குள்ளாக்கியுள்ளனர். குறைந்த அளவில் தமிழினி பிந்திய புலிகள் அமைப்பையும் அதனுடைய நடவடிக்கைகளையும் "கூர்வாளின் நிழலில்" வெளிப்படுத்தியுள்ளார். புலிகளின் தொடக்ககாலத்தை கணேசன் ஐயரின் "ஈழப்போராட்டத்தில் எனது பதிவுகள்" விமர்சிக்க முற்படுகிறது. சி.புஸ்பராஜா (ஈழப்போராட்டத்தில் எனது சாட்சியம்), நடேசன் (எக்ஸைல்) போன்றவர்கள் ஈ.பி.ஆர்.எல்.எவ்வினூடாகத்தங்களுடைய அனுபவங்களைச் சாட்சியமாக்கியிருக்கிறார்கள்.

ஆனால், புளொட்டில் இருந்தோர் முன்வைத்த அளவுக்கு ஏனைய இயக்கத்தினர்தங்களைச் சுயவிமர்சனத்துக்குள்ளாக்கவில்லை. ரெலோவினுள்ளே பொபி - தாஸ் பிரச்சினை (மோதல்) வந்தகாலத்தில், மேலோட்டமான முறையில் சில விமர்சனங்கள் எழுந்திருந்தது. ஈரோஸில் எஸ்.ஏ. உதயனின் "ரீ 83" ஒரு பகுதிச் சூழலை விவரிக்கிறது.

மற்றும்படி, அமைப்புக்குள் சுயவிமர்சனத்தை வலியுறுத்திய இந்த இயக்கங்கள் இன்னும் அந்தக் கதவுகளைச் சாத்திவிட்டு, கள்ளமௌனத்தோடுதானிருக்கின்றன. இந்தஇயக்கத்திலிருந்து வெளியேறிச்சென்றோரும்கூட எதைப் பற்றியும் வாய் திறப்பதில்லை. எல்லோரும் மௌனசாட்சிகளாகிவிட்டனர். இதில்ஒருசாரார் "இனிஎதைப் பேசித்தான்என்ன" - என்றவிடுபடல்மனோநிலைக்குச் சென்றுவிட்டனர். இன்னொரு சாரார், சாதி அபிமானம், மதப்பற்றுப்போல சரியோ தவறோ தாங்கள் இருந்த இயக்கம், தங்களுடையஇயக்கம் (என்னஇருந்தாலும் அது எங்களுடைய சாதி, எங்களுடைய மதம்) என்ற மனநிலையில் எல்லாவற்றையும் நியாயப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். தங்களுடைய இயக்க விசுவாசத்தை நிரூபித்துக் கொண்டிருக்கின்றனர். இதன் மூலம் தங்களையும் தங்களுடைய அமைப்பையும் புனித நிலையில் வைத்திருக்க முற்படுகின்றனர்.

ஆனால் எல்லா இயக்கங்களிலும் அதிகாரப்போட்டியும் ஜனநாயகப் போதாமைகளும் அணிகளின் உருவாக்கமும் பிளவுகளும் பகைமனநிலையும் இருந்தது. நம்பிக்கையோடும் கனவோடும் அர்ப்பணிப்புணர்வோடும் போராடச் சென்றவர்களை வஞ்சகமில்லாமல் அத்தனை இயக்கங்களும் சிதைத்திருக்கின்றன. கூடிக் குறைந்திருக்கலாமே தவிர, எல்லா இயக்கங்களும் சனங்களிலும் கைவைத்தே உள்ளன. ஆகவே அத்தனை இயக்கங்களிலும் பொறுப்புக் கூறலுக்கானஇடமுண்டு. கற்றுக்கொண்டபாடங்களுக்குரிய அவசியமிருக்கிறது. இதிலிருந்து விலகமுடியாதவரலாற்றுநிபந்தனைஉண்டு. இந்தப் பொறுப்பை இவர்கள் எப்போது ஏற்றுக் கொள்ளப்போகிறார்கள்? எப்பொழுது இதற்கான கதவுகள் திறக்கப்படும்?

புளொட்டின் உட்சிதைவுகளை புதியதோர் உலகமும் தீப்பொறிகளும் வெளிப்படுத்தத்தொடங்கிய துணிச்சலான - நேர்மையான - அந்த மரபின் தொடர்ச்சியில் "குமிழி" வந்திருக்கும்போது,இந்தக் கேள்விகள் தவிர்க்க முடியாமல் எழுகின்றன.

அப்படியென்றால், இயக்க அரசியலில் ஜனநாயகத்துக்கானபோராட்டமும்அறைகூவலும் இவர்களால்தான் நிகழ்த்தப்பட்டுள்ளது என்றே கூறவேண்டும். இதில் கோவிந்தன் தன்னுடைய பிரதியை முன்வைத்த காலம் மிகச் சவாலானது. அப்பொழுது புளொட் மிக வலுவான நிலையிலிருந்தது. அதை இந்தக் குமிழியும் சொல்கிறது. அன்றைய அந்தச்சூழலில்தன்னுடைய உயிர் அச்சுறுத்தலை எதிர்கொண்டநிலையிலேயே புதியதோர் உலகத்தை கோவிந்தன் (நோபேட்) எழுதினார். அது எல்லாப் பக்கத்தாலும் அபாயக் கத்திகள் சூழ்ந்திருந்த காலம். பின்னர், நோபேட் புலிகளால் கொல்லப்பட்டும்விட்டார். ரவிக்கு அந்தப்பிரச்சினைஇல்லை. அல்லதுகுறைவு. ரவியின் வாழ்காலமும் களமும்கூட வேறு. புளொட்டும் புலிகளும் இப்பொழுது பல்லில்லாத பாம்புகளாகிவிட்டன என்றாகிவிட்டது.

குமிழியின் கதை, வரலாற்றின் போக்கினை மாற்ற முற்பட்டோர், அது இருந்ததையும் விடக் கீழிறக்கியதை, கீழிறக்கப்பட்ட விதத்தைச் சொல்கிறது. மாற்றத்துக்கானபுரட்சியைச்செய்யமுற்பட்ட அமைப்பின்சிதைவையும்அந்தஅமைப்பில்இணைந்திருந்த போராளிகளின் சிதைவையும் சாட்சியமாக விரிக்கிறது. ஒவ்வொரு போராளியையும் அது தனிமனிதர்களாகவும் அமைப்பாகவும் அமைப்பைச் சேர்ந்தோராகவும் சமூகப் பிரதிநிதிகளாகவும் நோக்குகிறது.

அமைப்புக்குள் (கழகத்துக்குள்) முக்கியமாக மூன்று விதமான போக்குடையோர் உள்ளனர்.

ஒரு தரப்பிரனர் இயக்கத்தின் அதிகாரத்தை வலுவாக்கம் செய்வோர். தலைமைக்கு விசுவாசம் என்ற பேரில் போராளிகளையே ஒடுக்குவோர். மாற்று அபிப்பிராயிகளைக் கொன்றொழிப்போர்.

மற்றத்தரப்பினர் இதற்கு எதிரானவர்கள். அவர்கள் இயக்கத்துக்குள் ஜனநாயகத்துக்காகப் போராடுவோர். குறிப்பாக சந்ததியார் போன்றோர்.

மூன்றாவது தரப்பினர் அமைப்புக்குள் என்ன நடக்கிறது என்று தெரியாத குழப்பத்திலிருப்போர். அச்சமும் கேள்விகளும் இவர்களைச் சூழ்ந்திருக்கிறது.

"புதியதோர் உலகம்" பிரதானமாக மையப்படுத்தியது இரண்டாவது தரப்பினரானஜனநாயகவாதிகளின்அடையாளத்தை, அவர்களுடைய போராட்டத்தை. அதன் மூலமாக தலைமையின் அதிகார வெறியையும் துரோகத்தையும் மூடத்தனத்தையும்.

"குமிழி" அடையாளப்படுத்த முற்படுத்துவது மூன்றாவது தரப்பினரை. அவர்களின் வழியாக தலைமையின் குற்றங்களை. இங்கே புதியதோர் உலகத்தையும் குமிழியையும் நாம் ஒப்பிட்டுப் பேசவரவில்லை.

ஆனால், குமிழியை வாசிக்கும்போதும் அதைப்பற்றிச் சிந்திக்கும்போதும் இந்த உரையாடலை - இந்த நினைவுகொள்ளலை - தவிர்க்க முடியவில்லை. மேலும், இந்த இரண்டுபிரதிகளிலும்வருகின்றமனிதர்கள் (பாத்திரங்கள்) களம், அமைப்பு, காலம், நிகழ்வுகளில் பலவும் என ஏராளமான விசயங்கள் ஒன்றாக இருப்பதால் இயல்பாக இரண்டு பிரதிகளையும் அருகருகாக வைத்துப் பார்க்கும் சூழல் உருவாகிறது.

புதியதோர்உலகத்தில்பலபாத்திரங்கள் புனைபெயரில் உள்ளனர். உதாரணமாகச் சந்ததியார் அதில் கலாதரனாக வருகிறார். குமிழியில்சந்ததியாராகவே வருகிறார். புதியதோர் உலகத்தில் செயலதிபர் அல்லது பெரியய்யாவாகச்சித்திரிக்கப்படும் உமாமகேஸ்வரன்இங்கே உமாமகேஸ்வரனாகவே குறிப்பிடப்படுகிறார். இப்படிப் பல பாத்திரங்கள் குமிழியில் மெய் அடையாளத்தோடு நேரடியாக வருகின்றன.

ஆனால், இரண்டுக்குமிடையில் வேறுபட்டிருப்பதுகாலமுதிர்வு. ரவிஏறக்குறைய முப்பத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு - 60 களைநெருங்கிய வயதில் - இந்தப் பிரதியை நம்முன் வைக்கிறார். இது ஏற்கனவே எழுதப்பட்டிருக்கவும் கூடும். இருந்தாலும் ரவியின் 50 களுக்குப் பிறகே இது எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பதை ஊகிக்க முடிகிறது. இந்தக் கால இடைவெளியில் பெற்றுக்கொண்ட அனுபவங்கள், சிந்தனைகள் குமிழியில் வலுவாகத் தெரிகின்றன. வயதின்முதிர்வும்இதில்சேர்த்தி. என்பதால்தான் "குமிழி"செழிப்பாக வந்திருக்கிறது.

குமிழி ஒரு நாவலா? நல்லதொரு இலக்கியப்பிரதியா? அல்லது,போராட்ட வரலாற்றுப் பதிவா? அல்லது ரவி என்ற முன்னாள் இயக்க உறுப்பினர் (போராளி) ஒருவருடைய சாட்சியமா? அல்லது இந்தக் காலம் கோருகின்றகற்றுக்கொண்டபாடங்களுக்கானமுன்மாதிரி ஆவணமா? அல்லது இவையெல்லாவற்றையும்உள்ளடக்கிய ஒன்றா? இவற்றுக்கு அப்பாலான மெய்யுள் வடிமா?

இதைக்குறித்த கேள்விகளும் தூண்டல்களும் நமக்குள் உண்டாக்கப்போகின்ற விவாதங்கள் எவையாக இருக்கப்போகிறது?


கருணாகரன்

# H.N. PAWN BROKER
# எச்.என். அடகு கடை

- குறைந்த வட்டி வீதம்
- சேவைக்கட்டணம் இல்லை
- நம்பிக்கை மிகுந்த ஒரே இடம்
- சனிக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

## தங்கப்பவுணுக்கு அதிகூடிய முற்பணம் வழங்கப்படும்



வட்டி 3%

Hub Arcade, 28/15-23 Langhorne St, Dandenong VIC 3175
Tel/Fax : 03 8712 1406, Ruban : 0423 094 478



## நம்பிக்கையில் வாடிக்கையாளர்களின் மனதில் இடம் பிடித்த - 10 வருடகால அனுபவமுள்ள...

# PERPETUA TRADE

## Money Transfer Worldwide

We Guarantee the best rate for
SRI LANKA, INDIA, CANADA, UK & EUROPE

- SAME DAY BANK TRANSFER & HOME DELIVERY
- RESPONSIBLE CUSTOMER SERVICE
- CONVINIENT WORLDWIDE LOCATIONS
- EASY, QUICK INTERNET MONEY TRANSFER

COMMERCIAL BANK · BOC · PEOPLE'S BANK · SEYLAN BANK PLC · HNB · SampathBank · NSB National Savings Bank · cash Xpress

Send Money to any Bank In Sri Lanka

Hub Arcade, 28/15 -23 Langhorne St. Dandenong VIC 3175
Tel/Fax: 03 8712 1406 Mob: 0423 094 478 - Email: pmoneytransfer@ymail.com

# இடர்கால துயர் துடைக்கும் உதவிக் கரங்கள்





"Australia India Sports Council Inc." இன் "International Student Support" ஊடாக வெளிநாட்டு மாணவர்கள் மற்றும் கொரோனாவால் வேலை இழந்து, அரச நிவாரணங்களை பெற முடியாதவர்களுக்கு உணவுப்பொருட்கள் வழங்கும் திட்டத்தை விக்டோரியா மற்றும் பிற மாநிலங்களில் முன்னெடுக்கப்படுகின்றது. இதற்கமைய விக்டோரியாவில் சுமார் 500 பேர் இதுவரை பயனடைந்துள்ளனர். இத் திட்டத்தை "International Student Support இணைப்பாளர்களில் ஒருவரான கார்த்திக் அரசு, விக்டோரியாவில் முன்னெடுத்தார்.




கொரோனா பெருந்தொற்றால் வேலைவாய்ப்புகளை இழந்து அரச உதவிகளின்றித் தவித்தவர் களுக்காக சுமார் 5 ஆயிரம் டொலர் பெறுமதியான உணவுப் பொருட்களை குன்றத்துக் குமரன் ஆலயம், "WE CARE-VICTORIA" என்ற அமைப்பிடம் கையளித்தபோது...




ஸ்ரீ வக்கிரதுண்ட விநாயகர் ஆலய நிர்வாகத்தினரால் சுமார் 10 ஆயிரம் டொலர்கள் பெறுமதியான உணவுப்பொருட்கள் "WeCare – Victoria" என்ற அமைப்பின் ஊடக பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட போது...




சுவாமிநாராயணன் ஆலயத்தின் கொரோனா இடர் காலத்தின் உதவிப்பொருட்கள் WeCare Victoria அமைப்பிடம் கையளிக்கப்பட்டது. பல்கலாசார பிரதி அமைச்சர் Hon. Jason Wood, சுவாமி நாரயணன் ஆலயத்தின் Biren Joshi மற்றும் International Student Support Group இன் இணைப்பாளர் கார்த்திக் அரசு ஆகியோரை படங்களில் காணலாம்




Own an Ultra Luxury Apartment in Colombo, brought to you by an Australian Consortium.
3 BR Starts from LKR 58 m
2 BR Starts from LKR 33.5 m
The Lux Melba Luxury Residences
A unique opportunity to invest in a boutique development of only 19 ultra luxury residences, in a complex that is set to become the epitome of elegance and luxury in Wellawatte.The area boasts amenities such as sought after schools, restaurants, banks, hospitals, retail & religious centres, public transport& and best of all, minutes stroll to the Indian Ocean.
TO ENQUIRE PLEASE CALL OR EMAIL US:
Tel: +61 413 688 781 or +61 404 029 849
Email : theluxmelba@hotmail.com
www.luxmelba.com
35-36 IBC Road
Wellawatte, Colombo 06






CEYLON EXPRESS
MONEY TRANSFER
❖ Best Rates Guarantee
❖ Same Day Bank Transfer
❖ Responsible Customer Support
❖ Easy, Quick Internet Money Transfer
127, Walker st, Dandenong
CONTACT : OSMAN 0402 396 052

## ஊழிக்காலம்-2

15



# புயலுக்குப்பின்...

கவுத பார்வதி கவுத" என்று கேட்டு வந்தவளின் முகத்தில் ஆங்காரம் தெரிந்தது.

பார்வதி "நான்தான்" என்றபடி எழுந்தாள்.

"வாங்க எங்கூட" என்றாள். பார்வதி புறப்பட -

"ஓங்கட பொருள் எல்லாம் கொண்டு வாங்க" - என்றாள்.

"அய்யோ அன்ரிய வேற எங்கயோ கொண்டு போகப்போகினம்" - என்றாள் ஒருத்தி.

மற்றவர்கள் அவளுடைய பொருட்களை ஒன்று கூட்டி காட்போட் பெட்டியில் அடுக்கிக் கட்டினர். வரும் போதே கொண்டுவந்த பாடசாலைப் பையிலும் போட முடிந்ததைப் போட்டுக்கொண்டு எல்லோரிடமும் விடைபெற்றாள். பிள்ளைகள் பெட்டியை தம் கைகளில் வாங்கியவாறே பின் தொடர்ந்தனர். வாசல்வரை வந்தவர்கள் நின்றுவிட, பார்வதி சுமையுடன் வந்தவளைத் தொடர்ந்தாள்.

'சீ'புளொக்கைக் கடந்து 'பீ'புளொக்கிற்கு வந்தனர். காலையில் வாகனத்தில் வந்தவர்கள் அங்குள்ள வராண்டாவில் கதிரை போட்டுக்குந்தியிருந்தனர். அவர்கள் ஒவ்வொருவருக்கு முன்பாகவும் ஒரு பெண் இருந்தாள். ஏதோ கேட்டு எழுதிக் கொண்டிருந்தனர்.

பார்வதியை மண்டபத்தின் உள்ளே கூட்டிச்சென்ற ஆமிக்காறி -

"நிமலா...கோ...நிமலா" - என்று சத்தமிட்டாள்.

மண்டபத்துள் நுழைந்த பார்வதி விக்கித்துப் போனாள். அவ்வளவுக்கு நெரிசலாக இருந்தது மண்டபம்.

'கடவுளே இதுக்க எப்பிடி இருக்குதுகள்' - என்று ஏங்கிப்போய் நிற்க, நிமலா வந்தாள். இவள் அவளிடம் ஏதோ சொந்த விசயம் பேசினாள். பின்னர் -

"ஙா....இவுங்களுக்கு இங்கதான் இடம் எடுத்துக்குடு" - என்றுவிட்டுப் போனாள்.

பார்வதி தன் பொருட்களை அவ்விடத்திலேயே வைத்தாள். எனினும் நிமலா அவளுடன் எதுவும் பேசவில்லை. அவளைச் சூழ்ந்திருந்தவர்களிடம் எதையோ முணுமுணுத்துவிட்டு எழுந்து வெளியே போய்விட்டாள். ஒழுங்காக அனைவருமே நீட்டி நிமிர்ந்து அமர்ந்து கொள்ளவே அந்த மண்டபம் போதாது. இதற்குள் அவளெப்படி?

பார்வதி பொருட்களை அதிலேயே விட்டுவிட்டு எழுந்து வெளியே வந்தாள்.

வெளியே ஒருபுற வராண்டாவில் கதிரை போட்டு அமர்ந்திருந்த ஒவ்வொருவர் முன்னும் ஒரு பெண் தரையில் இருந்தாள். பின்னே ஒருவர் நின்று அவர்கள் சொல்வதை மொழி பெயர்த்தார். அவர்கள் பேசுவதை வேடிக்கை பார்க்க விடாமல் மற்றப் பெண்களை விரட்டுவதற்கென்றே இரண்டு ஆமிக்காரிகள் நின்றாலும் எந்தப்பெண்ணும் நகராமல் அவர்களும் புதினம் பார்ப்பதிலேயே நாட்டமாக இருந்தனர்.

"அன்ரீ...பார்வதியன்ரீ" - அந்த ஆண் குரலின் அழைப்பில் திடுக்கிட்ட பார்வதி திரும்பிப் பார்த்தாள். அவன் முன்னர் மிகவும் நட்பாக இருந்தவன். நீண்ட நாட்களாக அவனை அவள் காணவில்லை. அவன் தன் சொந்த ஊருக்குப் போயிருக்கலாம் என எண்ணியிருந்தாள்.

"நான் சுரேஸ். என்னை ஞாபகமிருக்கோ"

"ஓ...பேரைத்தான் யோசிச்சுக்கொண்டிருந்தன் சொல்லிட்டீங்க"

"எப்பிடி இருக்கிறீங்க"

"ம்..எல்லாரையும்போல காலை மடிச்சுத்தான்"

"உந்தக் கிண்டல் இன்னும் போகேல்ல"

"யார் இவை,இவையோட நீங்கள்...?"

"அன்ரி தெரியுந்தானே. நான் அம்மானோட பதினாறு வருசம் நிண்டனான். இவங்கட (அம்மான் கருணாம்மான்) நடவடிக்கையள் பிடிக்கேல்ல. மாறிட்டன். இப்ப இவங்களோடதான் விவரம் எடுக்கிறம்"

"அப்ப ஆமிக்காறியள் எடுக்கிறது."

"அது அவையள் காம்ப்பில வைச்சிருக்கவேணும்."

"இது..."

"இவை ரீ.ஐ.டீ. 'ரெரரிஸ்ட் இன்வெஸ்ரிகேட்டிங் டிவிசன்' இஞ்சஎல்லாற்றவிவரமும் தனித்தனி எடுக்கவேணும்" - என்றவன் சற்று யோசித்து -



"எப்பிடியும் ஒரு மாசம் செல்லும்" - என்றான்.

இதற்குள் -

"கலோ" - என்றொருவர் அழைத்தார்.

"பிறகு சந்திப்பம்" - என்றவாறு சுரேஸ் நகர்ந்தான்.

"என்ன தெரிஞ்ச ஆளா" - அழைத்தவர் கேட்டார்.

"ம்...அவ முந்தி பேப்பர் - ரேடியோ - நாடகம் எண்டு எல்லாத்திலயும் வேலை செய்தவா"

"ஙா... கூப்பிடுங்க கதைப்பம்" - என்றான். அவன்தான் இங்கு வந்திருப்பவர்களுக்கு பொறுப்பதிகாரி என்று தெரிந்தது.

"எங்க இருந்தீங்க இவள நாள்"

"டீ...ப்புளொக்கில"

"ஏன் இஞ்ச கொண்டுவந்தவங்கள். ஏதும் பெரச்சனையா?"

"பெரச்சனையா...? எனக்குத் தெரியாதே. வாங்கோ எண்டாள், வந்திருக்கிறன்."

"பிறகு, சொல்லுங்கோ. எப்பிடி எல்லாம் போகுது. மனதுக்கு கஸ்டமில்லையா"

"எதை நினைச்சு" - பார்வதி எதிர்க் கேள்வி போட்டாள்.

"இல்ல போராட்டம் பெயிலாப் போன" - அவள் லேசாகச் சிரித்தாள். என்னவெனப் புரியாமல் அவன் கேட்டான் -

"நீங்க புலி இயக்கத்தில நிண்டதுக்கு கவலைப்படயில்லையா"

"ஏன் கவலைப்படவேணும். லட்சக் கணக்கில் இல்ல கோடிக்கணக்கில மக்கள்பிரபாகரனைநம்பிப்போச்சினம். நாங்களும் போனம். வெல்லுவம் எண்ட நம்பிக்கை இல்லாட்டியும் பங்களிக்க வேணுமெண்ட மனம் இருந்தது. போனம். ஏன் போனவாரம் பிரித்தானியாவுக்குப் புறப்பட்ட விமானம் இடையில வெடிச்சுப்போய் இருநூற்றெண்பது போர் சாகேல்லயா. அந்தச்சனம் பிரித்தானியாவுக்குத்தானே போனதுகள். இடையில சாவமெண்டு நினைச்சா போனதுகள். நம்பிக்கை அப்படித்தான்"

"ம்ரொம்ப நல்லா பேசறீங்க" - என்றவன்-

"என் பேர் உபைத்துல்லா. நானும் எழுதறதுதான். உங்கட கதை நல்லம். பட், இப்பிடி போராடினது சரியா,அதுவும் அரசாங்கத்து எதிரா?"

"என்ன இப்பிடி சொல்லுறீங்கள், எல்லா சுதந்திரப் போராட்டங்களும் ஏதோ ஒரு அரசுக்கு எதிராத்தான் நடந்திருக்குது. நான் செய்தது தவறு எண்டா, மகாத்மாகாந்தி தவறு,நெல்சன் மண்டேலா தவறு, கோசிமின், பிடல் எல்லாருமே தவறுதானே. உரிமைக்காக போராடுறதில் குற்றமிருக்கிறதா எனக்கு தெரியேல்ல"

சுரேஸ் வேறு பக்கம் முகத்தை திருப்பிக் கொண்டான்.

உபைத்துல்லா அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு -

"உங்கட கதைக்கு மறுப்பில்ல, இங்க வந்திருக்கிற மத்தவங்களுக்கு தமிழ் தெரியாது" - என்றுவிட்டு சற்று அமைதியாக தனக்குள் யோசித்தார். பிறகு -

"அம்மா, நீங்கள் இங்க இருக்கக் கூடாது. சீக்கிரம் வெளியால போக வேணும். உங்கட பிள்ளை மாதிரி என்னை நெனைச்சுக்குங்க,இங்க வேற யார்கிட்டயும் இப்பிடி பேச வேண்டாம்"

"இதுதான் நானும் சொல்ல வந்தனான்" - என்றான் சுரேஸ்.

"இல்லம்மா, இங்க இருக்கிற வரைக்கும் இவங்களோட முரண்படாம நல்லமா இருந்தா கெதியில விட்டுருவாங்க. விசாரணை முடியத்தான் இதில எத்தினை பேர் கைது செய்யப்படுவாங்க எண்டு தெரியும். உங்கட உணர்ச்சிகளை மறைக்கப் பழகணும். இப்பிடி வேணாம் அம்மா" - என்றுவிட்டு அப்பால் போனான்.

பார்வதி குழம்பித்தான் போனாள். அவனிடம் தான் பேசிய அனைத்து வார்த்தைகளும் தனக்கு எதிரானவை என்பதை எண்ணிப்பார்த்தாள். அவள் படித்திருந்த ராஜதந்திர நூல்களும், வள்ளுவரும்கூட அவளை எச்சரித்தனர்.

விசாரணையாளர்கள் நான்கு மணிக்குப் புறப்பட்டுப்போனார்கள்.

அங்கே ஒரு சிற்றுண்டிச்சாலை இருந்தது. அதை ஒரு முஸ்லீம் வர்த்தகர் குத்தகை எடுத்து செய்துவந்தார். உணவுப் பொருட்கள் என்று பிஸ்கட், ரொபி, சீனி, தேயிலை, பால்மாவகைகள், காரப் பொடி, குளிர்பானங்கள், தலைக்கு வைக்கும் எண்ணெய் சோப் வகைகள், சட்டைப்பின் கிளிப் என மேலும்பல பொருட்கள் இருந்தன.

சனம் தமக்குத்தாமே தேநீர் தயாரிப்பதால் தேயிலை, சீனி, பால்மா, பிஸ்கட் என்பன அந்தக்கடையில் ஆமோகமாக விற்பனையானது. விலையை அந்த வியாபாரி தானே தீர்மானித்து விற்பான். பொருளாதாரத் தடைக்குள்ளிருந்து வந்தவர்களுக்கு இதுகூட மலிவாகத்தான் தெரிந்தது.

இரவானதும் உணவு வந்தது. தினசரி பாண்தான். பேக்கரியிலிருந்து ஒரு கன்ரர் வாகனத்தில் பாண் வந்தது.

இந்த மண்டபத்துக்கு பார்வதி கொண்டு வரப்பட்டிருந்தாலும் இன்னும் யாருடைய குழுவிலும் சேர்க்கப்படவில்லை. அவளுக்கொரு இடமில்லை. அவள் கொண்டு வந்து வைத்தபடியே நடைபாதையிலேயே அவளுடைய பெட்டி இருந்தது. கைகளில் தலையைத் தாங்கியவாறே வராண்டாவில் அமர்ந்திருந்தாள். சிறிய பெண்ணொருத்தி குடுகுடுவென ஓடிவந்தாள். பார்வதியின் அருகே அமர்ந்தவள் -

"என்ன மம்மீ எதில இருக்கப் போறீங்க" - என்றாள்.

"இன்னும் தீர்மானிக்கேல்ல"

"இருங்க மம்மி சாப்பாடு எடுத்துக்கொண்டுவந்து கூட்டிப்போறன்" - என்றவாறே ஓடிப்போனாள். அதற்குப் பிறகு அவனை பார்வதி காணவே இல்லை. அப்போது, பார்வதிக்கு அருகே வந்தவள் ஒருத்தி தன் ஊன்றுகோலை வைத்துவிட்டு தன் ஒற்றைக்காலுடன் அமர்ந்தாள்.

"மம்மீ சாப்பிட்டீங்களா"

"இல்லை எந்தக் குழுவெண்டு தெரியேல்ல"

(21ஆம் பக்கம் பார்க்க)

(20ஆம் பக்கத் தொடர்ச்சி)

"இருங்க பாத்திட்டு வாறன்" - என்று அவள் எழுந்திருக்கும் முன்பே, இன்னுமொரு பெண் பாணும் ஒரு தட்டில் பருப்புக்கறியும் கொண்டுவந்து பார்வதியிடம் கொடுத்தாள். ஊன்றுகோலுடன் இருந்த தர்சினி தனது உணவையும் எடுத்தாள். அவளுடன்பேசியவாறேசாப்பிட்டாள்.

"மம்மீ என்ர இடத்தில கொஞ்ச இடம்தான் இருக்கு. அங்கவந்து உங்கட பொருட்களை வச்சிட்டு அதில இருங்கோ" - என்றாள். அவளை நன்றியுடன் பார்த்த பார்வதி -

"சரி உங்களுக்கு இடம்"

"பொருட்களை வச்சிட்டு இரவில வெளியில முத்தத்திலதான் படுக்கிறனாங்கள்."

பரந்த கிறவல் பரவிய பெரிய முற்றம் அது.

தர்சினி காட்டிய இடத்தில், ஒராள்தான் படுக்கக்கூடியவாறு ஒரு பாய் விரித்திருந்தது. பாதிப்பாயில் தர்சினியின் பொருட்களுடன் தனது பெட்டியைவைத்துவிட்டு, அதன்மீதுபையையும் வைத்தாள் பார்வதி. பிறகு, தனது பாயையும் எடுத்துக்கொண்டு அவ-ளுடன் முற்றத்துக்கு வந்தாள்.

நூற்றுக்கணக்கான பெண்கள் அந்த கிறவல் முற்றத்தில் தங்கள் தங்கள் பாய்களை விரித்து இருவர் மூவராக

# புயலுக்குப்பின்...



சேர்ந்து படுத்திருந்தார்கள். பார்வதியும் தர்சினியும் அருகருகாகப் பாய்களை விரித்தனர். வானமே கூரையாக வையமே பாயாக நீட்டி நிமிர்ந்து படுத்தாலும் தூங்கமுடியவில்லை. நள்ளிரவு வரை பெண்கள் பேசிக்கொண்டேயிருந்தார்கள்.

திறந்தவெளி படு குளிராக இருந்தது. அதிகாலை சடசடவென மழை தூறத் தொடங்கியது. எல்லோரும் மண்டபத்துள் ஓடினர். மண்டபம் எல்லோரும் தூங்குமளவுக்கு இடம் போதுமாக இருக்கவில்லை. கிடைத்த இடைவெளிகளிலும் பொதிகளின்மீதும் விழுந்து படுத்தனர். 'தள்ளாதை''இடிக்காதை'' ஏய்,சாமான்.. சாமானுக்கு மேல மிதிக்கிறாய்''காலால உதையிறாய்' போன்ற சத்தங்கள் கேட்டுக்கொண்டே இருந்தாலும்,யாரும் அதைப் பொருட்படுத்தவில்லை. நல்ல வேளையாக மழை நின்றது. மறுபடி, அவர்கள் வெளியே போய் ஈரமண்ணில் பாய் விரித்தனர்.

உணவைத்தவிர வேறெதுவும் அவர்களுக்கு தரப்படவில்லை வீட்டிலிருந்து பிள்ளைகளைப் பார்க்கவரும் உறவினர்கள் கொடுத்த பாய்கள்தான் பெரும்பாலும் புழக்கத்திலிருந்தன. ஓமந்தையில் ராணுவத்தினரின் கூட்டுக்குள் இருந்த அதே மனநிலை இப்போதும் இருந்தது. வெறுமையாகிப்போன மனம் விடியும் வரை உறங்க விடவில்லை.

காலையில் அந்த வளாகத்தின் வேலியோரமாக தனித்தனி அடுப்புமூட்டி நான்கு ஐந்து பேராக தேநீர் தயாரிப்பதில் ஈடுபட்டிருந்தனர் பிள்ளைகள். பார்வதி தன் பாத்திரத்தில் தேயிலையையும் சீனியையும் போட்டு எடுத்துக்கொண்டு யாரிடமாவது தேநீருக்கான சுடுதண்ணீரை வாங்கப்போனாள்.

"நீங்க எப்ப மம்மீ வந்தநீங்க" - ஊடகத்துறையைச் செர்ந்த பெண்ணொருத்தி கேட்டாள்.

"பதினேழாம் திகதி"

"நாங்க பதினஞ்சாம் திகதி வந்திட்டம்"

"நாங்களும் பதினேழாம் திகதிதான். கூட்டிக்கொண்டு போறமெண்டு வச்சிருந்திட்டு, கடைசிநேரம் 'சனத்தோட சனமாப் போங்கோ' எண்டு கலைச்சு விட்டிட்டாங்கள்" ரோசா வேதனையோடு சொன்னாள்.

"இனி அதுகளைக் கதைச்சு என்னத்துக்கு விடுங்கோ" - என்று ரதி கதையை முடித்தாள்.

# வலைஞர் பதிகம்






























# மாதராசிபலன்



## மேடம்

இந்த மாதம் நண்பர்களுடன் சேர்ந்து செய்யும் காரியம் சாதகமான பலன் தரும். திட்டமிட்டு செய்யும் பயணங்கள் வெற்றி பெறும். செலவு செய்வது பற்றி யோசனை செய்து தேவையென்றால் மட்டுமே செய்வீர்கள்.

திருமண சுபகாரிய முயற்சிகளை சில காலம் ஒத்திவைப்பது நல்லது. கலைஞர் களுக்கு வாய்ப்புகள் தேடிவந்தாலும் பண வரவில் சில தடைகளும் நிலவும். பொன், பொருள், ஆடை, ஆபரணம் சேரும். தொழில், வியாபாரம் செய்பவர்கள் பெரிய முதலீடுகளில் செய்ய நினைக்கும் காரி யங்களில் சாதகமான பலனை அடை வார்கள்.

## இடபம்

இந்த மாதம் எதையும் ஆராய்ந்து பார்த்த பிறகே அதை செய்ய முற்படுவீர்கள். தொட்ட காரியம் வெற்றியில் முடிந்தாலும் சற்று கால தாமதம் ஆகலாம். பணவரத்து கூடும். பொறுமையாக கையாள்வதன் மூலம் பெரிய பிரச்சனைகளைத் தவிர்க்க லாம். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த பிரச்சனைகள் குறையும். மனதில் எதிர்காலம் பற்றிய சிந்தனை உண்டாகும்.

திருமண சுபகாரியங்களுக்கான முயற்சி களில் தடைகளுக்குப் பின்னே அனுகூலப் பலனை அடையமுடியும். வெள்ளிக்கிழமை யில் நவகிரகத்தில் சுக்கிரனுக்கு தீபம் ஏற்றி பூஜை செய்ய பணவரத்து கூடும். குடும் பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.

## மிதுனம்

கவலைகளை பொடிப்பொடியாக்கும் மிதுன ராசி அன்பர்களே, இந்த மாதம் சிற்சில பிரச்சனை உண்டாகும். நீங்கள் நல்லதாக பேசினாலும் எதிரில் உள்ளவர் கள் அதை தவறான கண்ணோட்டத் துடனேயே பார்ப்பார்கள். விழிப்புடன் செயற்படவும்.

பணவரத்து திருப்தி தரும். இந்த மாதம் தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கு போட்டி பொறாமைகள் விலகி புதிய வாய்ப்புகள் தேடிவரும்.பொன், பொருள், ஆடை, ஆபரணம் சேரும். தொழில், வியா பாரம் செய்பவர்கள் பெரிய முதலீடுகளில் செய்ய நினைக்கும் காரியங்களில் சாதக மான பலனை அடைவார்கள்.

## கடகம்

வாழ்க்கையில் முக்கிய முடிவுகளை எடுக்கும் கடக ராசி அன்பர்களே, இந்த மாதம் எதிலும் கவனமாக இருப்பது நன்மை தரும். பணவரத்தை அதிகப்படுத்தும். பேச்சின் இனிமை சாதூரியம் இவற்றால் எடுத்த காரியம் கைகூடும். புண்ணிய காரியங்களில் நாட்டம் அதிகரிக்கும்.

நீண்ட நாளாக எதிர்பார்த்த உதவி கிடைக்கப் பெறுவீர்கள். உடல் ஆரோக்கி யத்தில் சிறுசிறு பாதிப்புகள் தோன்றி மருத்துவச் செலவுகளை உண்டாக்கும்.

குடும்பத்தில் சிறுசிறு வாக்குவாதங்கள் உண்டாகி ஒற்றுமைக் குறைவுகளை ஏற் படுத்தும். சுபகாரிய முயற்சிகள் சில தடை களுக்குப்பின் கைகூடும்.

## சிம்மம்

கூடுதலாக உழைக்க காத்திருக்கும் சிம்ம ராசி அன்பர்களே, இந்த மாதம் புத்தி கூர்மையுடன் எதையும் செய்வீர்கள். எதிர் காலம் தொடர்பான திட்டங்கள் மனதில் தோன்றும். எதையும் முன்னேற்பாட்டுடன் செய்வீர்கள். விவேகம் உண்டாகும் வீண் அலைச்சலை தவிர்ப்பது நல்லது.

உற்றார்– உறவினர்களின் வருகையால் சில மனசஞ்சலங்கள் உண்டாகும். முயற்சி கள் அனைத்திலும் எதிர்நீச்சல் போட்டே முன்னேற வேண்டியிருக்கும். முன்கோபத் தைக் குறைத்துக்கொண்டு நெருங்கியவர் களை அனுசரித்து நடப்பது நல்லது. எதிர் பார்க்கும் லாபத்தை அடையமுடியாது. கொடுக்கல்–வாங்கலிலும் கொடுத்த வாக் குறுதிகளைக் காப்பாற்ற முடியாமல் போகும். கடன் தொகைகளை வசூலிப்பதில் தடைகள் உண்டாகும்.

## கன்னி

உடல் நிலையில் தொய்வை சந்திக்க காத்திருக்கும் கன்னி ராசி அன்பர்களே, இந்த மாதம் எந்த ஒரு காரியமும் வெற்றி யடைவதுடன் லாபகரமாகவும் இருக்கும். பணவரத்து அதிகரிக்கும். செயல் திறன் மேலோங்கும். இழுபறியாக இருந்த ஒரு சில விஷயங்கள் நல்ல முடிவுக்கு வரும். வீடு, வாகனங்கள் வாங்கும் நிலை உரு வாகும்.

உடல்நிலையில் அடிக்கடி பாதிப்புகள் தோன்றி மறையும். நவகிரக புத பகவா னுக்கு பச்சைபயிறு படைத்து வணங்கி வர மனதில் தைரியம் உண்டாகும். எதிர்ப்புகள் அகலும். எதிலும் வெற்றி உண்டாகும்.

## துலாம்

உறவினர் வருகையை விரும்பும் துலா ராசி அன்பர்களே, இந்த மாதம் பல்வேறு நன்மைகள் உண்டாகும். கடினமான பணிகளையும் செய்து முடிக்கும் துணிச்சல் ஏற்படும். காரிய வெற்றியால் மனதில் சந்தோஷம் உண்டாகும். இருக்கும் இடத்தை விட்டு வெளியில் சென்று தங்க நேரிடும்.

எந்த ஒரு காரியமும் லாபகரமாய் நடந்து முடியும். செயல் திறன் கூடும். வீண் செலவை குறைப்பது நல்லது. புத்திரவழி யில் சிறுசிறு மன சஞ்சலங்கள் உண்டாகும். பணவரவுகள் சிறப்பாகவே இருக்கும்.

கொடுக்கல் – வாங்கலில் அவதா னமாகச் செயற்படுவதன் மூலம் புதிய பிரச்சினைகள் வராமல் இருக்கலாம்.

## விருச்சிகம்

இரவு, பகலாக உழைக்க காத்திருக்கும் விருச்சிக ராசி அன்பர்களே, இந்த மாதம் பணவரத்து அதிகரிக்கும். அறிவு திறமை வெளிப்படும். உங்கள் வார்த்தைக்கு மதிப்பு உண்டாகும். அடுத்தவர்களின் குற்றச்சாட் டுக்கு ஆளாகநேரிடலாம் கவனம் தேவை. அதிகமாக உழைக்க வேண்டி இருக்கும். உங்கள் பணிகளில் பல குறுக்கீடுகள் வந்தா லும் அதை சாமர்த்தியமாக சமாளித்து வெற்றி காண்பீர்கள்.

பெண்கள் மனதடுமாற்றம் இல்லாமல் எதையும் செய்வது நல்லது. தேவையான உதவிகள் கிடைப்பது தாமதப் படும். வீண் அலைச்சல் உண்டாகலாம். மாணவர்கள் பாடங்களை மனநிறைவுடன் படிப்பீர்கள். கூடுதல் மதிப்பெண் பெற மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றியடையும்.

## தனுசு

உங்கள் மனதில் உள்ள ஆதங்கங் களை வெளிப்படுத்தும் தனுசு ராசி அன்பர்களே, இந்த மாதம் மனதில் தெளிவு உண்டாகும். ஆக்க பூர்வமான யோச னைகள் தோன்றும். கடித போக்குவரத்து அனுகூலமான பலனை தரும். பயணம் லாபகரமாக இருக்கும்.

பெண்கள் நீண்ட நாட்களாக இழுபறி யாக இருந்த ஒரு காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். எதையும் புத்திசாதுரி யத்தை பயன் படுத்தி சமாளிப்பீர்கள்.

பணவரவுகள் ஓரளவுக்கு சிறப்பாக இருக்கும். முயற்சிகளில் சில தடைகளை சந்தித்தாலும் எதிர்நீச்சல் போட்டாவது முன்னேறிவிடுவீர்கள். சுபகாரிய முயற்சி களில் சில தடைகளுக்குப்பின் வெற்றி கிட்டும்.

## மகரம்

செலவுகளை அதிகமாக சந்திக்கும் மகர ராசி அன்பர்களே, இந்த மாதம் செலவு கூடும். வாகனங்களால் செலவு உண்டா கும். மனதில் வீண் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். நெருக்கடியான சந்தர்ப்பத்தில் உதவிகள் கிடைப்பது கடினமாக இருக்கும். எந்த காரியங்களில் ஈடுபட்டாலும் மன தடுமாற்றம் இல்லாமல் இருப்பது நல்லது. பெண்களுக்கு மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கி தெளிவு உண்டாகும்.

பணவரவுகளிலும் தடை ஏற்படுவதால் குடும்பத்தில் நெருக்கடிகள் அதிகரிக்கும். கடன் வாங்க வேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். எந்தவொரு காரியத்திலும் ஒரு முறைக்கு பலமுறை சிந்தித்துச் செயல் படுவது நல்லது.

## கும்பம்

குடும்பத்தில் மகிழ்ச்சியைப் பெறப் போகும் கும்ப ராசி அன்பர்களே, இந்த மாதம் தொழில் தொடர்பான விஷ யங்களில் தீர ஆலோசித்து ஒரு முடிவுக்கு வருவீர்கள். பலராலும் செய்ய முடியாத காரியங்களை வெற்றிகரமாக முடிக்கும் நிலை வரலாம். பணவரத்து திருப்தி தரும்.

கொடுக்கல்–வாங்கல் சரளமான நிலை யில் நடைபெறும். பெரிய மனிதர்களின் ஆதரவுகள் தக்க சமயத்தில் அமையும். திருமண சுபகாரியங்கள்கூட கைகூடும். பொன், பொருள், ஆடை, ஆபரணம் சேரும். முயற்சிகள் அனைத்திலும் வெற்றியினைப் பெறுவீர்கள்.

வெளிநாடுகளுக்குச் செல்லக்கூடிய வாய்ப்பு உண்டாகும்.

## மீனம்

மற்றவர்களை மனம் நோகாமல் பார்த்துக் கொள்ளும் மீன ராசி அன்பர்களே, இந்த மாதம் மற்றவர்களின் ஆதரவு கிடைக்கும். புத்தி சாதுர்யத்தை பயன்படுத்தி காரியங்களை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். செயல்திறன் அதிகரிக்கும். ஆனால் பயணங்களின்போதும் உடல் ஆரோக்கியத்திலும் கவனம் தேவை.

தொழில், வியாபாரம் செய்பவர்கள் நல்ல முன்னேற்றத்தை அடைய முடியும். கொடுக்கல்– வாங்கலும் சரளமான நிலை யில் நடைபெறும். பெரிய தொகையைக்கூட எளிதில் ஈடுபடுத்தி லாபம் காணமுடியும்.

குடும்ப ஒற்றுமை சிறப்பாக இருக்கும். எதிர்பாராத பணவரவுகளால் உங்களின் வாழ்க்கைத்தரம் உயரும்.


• 1 x Dahua 4 Channel Network Recorder
• 4 x Dahua 6MP Day & Night Camera with sound
• 1 x 1TB Hard drive
• 1 x Dahua UPS 600VA
• Cables, Accessories
$1350 INSTALLED
Standard Package
3 years Warranty on all products and labour.
All work carried out under insurance and performed by licensed technicians.
• 1 x Dahua 8 Channel Network Recorder
• 6 x Dahua 6MP Day & Night Camera with sound
• 1 x 2TB Hard drive
• 1 x Dahua UPS 600VA
• Cables, Accessories
$1750 INSTALLED
Super Package
3 years Warranty on all products and labour.
All work carried out under insurance and performed by licensed technicians.
• 1 x Dahua 8 Channel Network Recorder
• 8 x Dahua 6MP Day & Night Camera with sound
• 1 x 3TB Hard drive
• 1 x Dahua UPS 600VA
• Cables, Accessories
$2550 INSTALLED
Ultra Package
3 years Warranty on all products and labour.
All work carried out under insurance and performed by licensed technicians.
Other Services
IP/HD CCTV Systems | Security Alarm | Alarm Monitoring | Access Control | Security Fog System
Data & Tele-communication | Video Intercom | Smart Home | Solar CCTV /Ducted Vacuum | Digital TV Antena
NS Systems SECURITY
0447 533 555
www.nssystems.com.au
UTECH SECURITY Corporate Group
We are registered and licensed by Victoria Police. Private security Business License: 910-932-10S
info@nssystems.com.au
PO BOX 633, Noble Park, VIC 3174


Transco Shopping
Shop Online at Any Australian Retailer
and have your goods sea-freighted to you in Sri Lanka
get your free virtual address
Scan QR code to watch How it works Video
More than 1000 + stores to shop from
coles
Woolworths
Target
Kmart
MYER
BIGW
DAVID JONES
amazon
THE GOOD GUYS
JB HI-FI
dick smith
Ted's cameras
Officeworks
IKEA
Sportsgirl
FOREVER NEW
SWAROVSKI
novo
COTTON:ON
rebel
EB GAMES
Setting up is so easy and it's a dream come true
1 Go to our website transcoshopping.lk and get your own unique vertual address
2 Shop online in any Australian Store and use your unique vertual address as your delivery address
3 Once we receive the goods we pack them in a Transco box (prices available on the website) and notify you. When shipping fee is payed, we sea-freight to you in Sri Lanka
4 Tell everyone! about Transco Shopping
For more information visit our website or send us an email
All logos, brands, trademarks and registered trademarks are property of their respective owners. All company, product and service names used in this ad are for identification purposes only. Use of these names, trademarks and brands does not imply endorsement.
Transco Shopping is a part of Transco CARGO
transcoshopping.lk
info@transcoshopping.lk